# கிராமானுகூலன்

1928 ஜூன் - ஜூலை

௨

JL
31mN27GR
N28.2.6
223470

Regd. No. M. 1930 | வந்தேமாதரம் | Annual Subscription Rs. 2

# கிராமானுகூலன்.

# GRAMANUKULAN.

[ ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை ]

KUMBAKONAM.

புத்தகம் 2 | 1928ஸ்ரீ ஜூன்—ஜூலைமீ விபவஸ்ரீ வைகாசி—ஆனிமீ | ஸஞ்சிகை 6

சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| உள்நாட்டிற்கு வருட சந்தா [தபால்கூலி உள்பட] | ... ரூ | 2 0 0 |
| வெளிநாடுகளுக்கு „ „ | „ | 2 8 0 |
| தனிப்பிரதி „ „ | „ | 0 3 0 |

விஷய சூசிகை.


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | கிராம உத்தியோகஸ்தர்கள் ... பத்திராதிபர் | 107 |
| 2 | திருப்பனந்தாள் ஆதீ... .... | 109 |
| 3 | மன்னார்குடி தாலூகா ... உ. சங்கம் „ | 109 |
| 4 | விசேஷ கல்யாணம் „ | 109 |
| 5 | காணங்களில் உத்தமா... | 110 |
| 6 | கடிதம் „ | 110 |
| 7 | கிராம பஞ்சாயத்துகள் (ஸ்ரீமான் M. R சாம்ப... B.A.) ... | 111 |
| 8 | கிராம புனருத்தாரண திட்டம் (கனம் V ராமதாஸ் பந்துலு B.A., B.L., ராஜாங்கசபை மெம்பர்) | 113 |
| 9 | கும்பகோணம் தாலூகா கி. உ. சங்கம் .... | 115 |
| 10 | கிராமங்களில் உண்மையான நிர்மாண வேலை (பாலையூர் சத்திலேயம் ஸ்ரீமான் K ராஜகோபால ஐயர்) | 116 |
| 11 | கிராம உத்தியோகஸ்தர்களின் ராஜிநாமா .... | 118 |
| 12 | கிராமனுகூலன் விளம்பர விகிதம் .... | 118 |
| 13 | ராணா பிரதாப சிம்மன் or "ரஜபுத்திர தேசபக்தி" (ஸ்ரீமான் S. மகாலிங்க சர்மா) .... | 119 |
| 14 | பண்டைத்தமிழரின் மேம்பாடு (ஸ்ரீமான் வ. சா. வேங்கடராம ஐயர்) .... | 123 |
| 15 | இடும்பாவனம் பிரமோத்ஸவம் .... .... | 125 |
| 16 | அன்னதான பலன் .... .... | 129 |
| 17 | திருப்பனந்தாள் ஆதீனம் மூன்று விசேஷதர்பங்கள் | 127 |
| 18 | தென்னிந்தியக் கோவில்கள் (ஸ்ரீமான் P. V. ஜெகதீசய்யர்) .... | 129 |
| | .... .... | 130 |
| 19 | மதிப்புரை .... .... .... | 130 |
| 20 | விளம்பரங்கள் ... .... .... | |


விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| பக்கம் 1க்கு [2-கலம்] | மீ 1க்கு ரூ. 10 | காலம் ½க்கு மீ 1க்கு | ரூ. 2 8-0 |
| பக்கம் ½க்கு [1-கலம்] | „ 5 | இஞ்சு 1க்கு „ | அணா 8 |

நீடித்த விளம்பரங்களுக்கு மானேஜருக்கெழுதித் தெரிந்துகொள்ளவும்

N. ஆபத்ஸகாய ஐயர்—பத்திராதிபர்.

மருதாந்தநல்லூர்—திப்பராஜபுரம் போஸ்டு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 9 AUG 1928 MADRAS

# கிராமானுகூலன்.

ஆதரணைக் கர்த்தர்கள்

**ஸ்ரீமான் N. வெங்கட்டராம ஐயர் அவர்கள்**

**ஸ்ரீமான் K. S. சிவசுப்பிரமணிய ஐயர் அவர்கள், M. L.**

போஷகர்.

**ஸ்ரீமான் T. S. துரைஸாமி பிள்ளை அவர்கள்**

கிராம முன்சீப், திருப்பனந்தாள்.

## கிராமானுகூலன்.

சந்தா விபரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| போஷகர்களுக்கு வருஷம் 1-க்கு | ரூ. | 50 | 0 | 0 |
| அபிமானிகளுக்கு ,, | ... | 15 | 0 | 0 |
| ஜீவிய சந்தா | .... | 25 | 0 | 0 |
| வருடசந்தா இந்தியா, பர்மா, சிலோன். | ... | 2 | 0 | 0 |
| அயல்நாடுகளுக்கு (சிங்கப்பூர் பினங்கு, மோரீஸ், நேட்டால்.) | .... | 2 | 8 | 0 |

பத்திரிகாபிமானிகள் போஷகர்களாகவும் அபிமானிகளாகவும், ஜீவிய சந்தாதார்களாகவும் சேர்ந்து ஆதரிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர்.


கும்பகோணம் தென் இந்தியா கன்பெக்ஷனரி

பாக்டரியில் தயாரிக்கப்படும்

**பெப்பர்மெண்டையே உபயோகியுங்கள்!**

**என் ?**

என் எனில் இந்திய மூலதனத்தைக்கொண்டு இந்தியர்களால் நடத்தப்படும். தொழிற்சாலை இதுவே வெகு நேர்த்தியானவை என்று புகழ்பெற்றது. விலை நயம் ஒருமுறை தருவித்துப்பாருங்கள். உண்மை விளங்கும்.

**விலை விபரத்திற்கு உடனே எழுதுங்கள்.**

**THE SOUTHERN INDIA CONFECTIONERY FACTORY,**

**KUMBAKONAM.**



ரிஜிஸ்டர் நெ. M. 1930] வந்தேமாதரம். [வருட சந்தா ரூபா 2—0—0

# கிராமானுகூலன்.

[ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.]


"ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெதுவேண்டும்"—பாரதி.

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."—(ஔவை)


| புத்தகம் | | ஸஞ்சிகை |
|---|---|---|
| 2 | விபவ ஹு வைகாசி — ஆனி மீ | 6 |


# கிராம உத்தியோகஸ்தர்கள்.

கும்பகோணம் ஜமாபந்தியானது, டிவிஷனல் ஆபீஸர் மிஸ்டர் V. S. ஹாஜ்மாடி I. C. S., அவர்களால் நடத்தப்பட்டது. ஷெயாரிடம் கி. உ. சங்கம் டெபுடேஷன் சென்று ஜமாபந்தி குறைகளை தெரிவித்துக்கொண்டதின் பலனை ஷெயார் உத்திரவுசெய்திருந்ததின்பேரில் தாலூகா சோதனை ஒரு நாளிலும், டிவிஷன் சோதனை ஒருநாளிலும் முடிந்து விட்டதென்றும், தாலூகா ஹெட் அக்கவுண்டு கையெழுத்து வேண்டியதில்லை யென்றும், உத்தரவாகி விட்டதாயும் தெரிய வருகிறது இவ் வருஷ ஜமாபந்தியில் கும்பகோணம் தாலூகா கிராம உத்தியோகஸ்தர்கள் அதிக கஷ்டப்படவில்லை யென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். சேவகர்களில் சிலர் பணம் வாங்கியதாக தெரியவந்ததின்பேரில் டிவிஷனல் ஆபீஸர் விசாரணை செய்ததில் 6 சேவகர்கள் தாங்கள் மாமூலாய் வாங்குகிற வழக்கப்படி வாங்கினதாயும் மன்னிக்கவேணுமாயும் கேட்டுக் கொண்டார்களாம். அவர்களுக்கு தலைக்கு ஒரு ரூபாய் விதம் அபராதம் விதித்து எச்சரிக்கப்பட்டார்கள். கிராம உத்தியோகஸ்தர்களில் சிலரை விசாரித்தபோது பயந்துகொண்டு குமாஸ்தாக்களுக்கும் சேவகர்களுக்கும் தாங்கள் ஒன்றும் கொடுக்கவில்லையென்று கூறிவிட்டார்களாம் உண்மை தெரிந்து பரிகாரம் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் கேட்கும் அதிகாரியிடம் பயந்துகொண்டு உண்மையைக் கூறாவிட்டால் பரிகாரம் எப்படி கிடைக்கும், கிராம உத்தியோகஸ்தர்களுக்கு என்றுதான் தைரியம் பிறக்குமோ ?

மாயவரம், திருத்துறைப்பூண்டி தாலூகா ஜமாபந்தியானது ஜில்லா கலெக்டர் மிஸ்டர் கிரே அவர்களால்நடத்தப்பட்டது. கிராம உத்தியோகஸ்தர்களுக்கு அதிக அசவுகரியங்கள் ஏற்படவில்லையென்றும, பணைச்சிலவிற்குமட்டும் குறையில்லையென்றும் கூறப்படுகிறது. கலெக்டர் மிராசுதார்களின் மனுக்களை கவனித்து தகுந்த பரிகாரமளித்து வந்தார். இந்த இரண்டு தாலூகாவின் ஜமாபந்தி மகாநாடுகள்தான் கூட்டமுள்ளதாயிருந்தது. ஆனால் பிரயோஜனம் எல்லாம் ஒன்றே.

நன்னிலம், நாகப்பட்டணம் ஜமாபந்தியானது டிவிஷனல் ஆபீஸர் மிஸ்டர் C. K. விஜயராகவன் I. C. S, அவர்களால் நடத்தப்பட்டது. கிராம உத்தியோகஸ்தர்களுக்கு சிறிது கஷ்டம் அதிகமாகயிருந்ததாக கூறப்படுகிறது. அபராதங்களும் ஜாஸ்தியாம் மிராசுதார்களின் மனுக்களுக்கு யாதொரு பரிகாரமும் கிடையாதாம் ஆனால் ஜமாபந்தி மிமோவில் குமாஸ்தாக்களால் எழுதப்பட்டிருந்தவற்றிற்கு மாத்திரம் பரிகாரமுண்டாயிற்றும். ஜமாபந்தி காலத்தில் வெட்டி தலையாரிகளை ஒன்றாய் நிற்கும்படி செய்ததில் ஆதி திராவிடர்களும், மற்றவர்களும் சற்று விலகி நிற்பதைப் பார்த்து டிவிஷனல் ஆபீஸர் மனம் சகியாதவராகி ஆதிதிராவிட வெட்டியை மத்தியில் வைத்து பிராமணரல்லாத 2 பேர்களை இருபக்கத்திலும் நிற்கச்செய்து ஒருவரோடொருவர் இடித்துக்கொண்டிருக்கும்படி நிற்கச்செய்து இதுதான் சர்க்கார் உத்தரவுதெரிந்துகொள்ளுங்கள்

800 009
223470

என்று சொன்னதென்பது நியாயமாகக் காணப்படவில்லை. அப்படி செய்யும்படி G. O ஏதேனும் இருப்பதாகவும் தெரியவில்லை.

தஞ்சாவூர் தாலூகா ஜமாபந்தியானது டிவிஷனல் ஆபீஸரால் நடத்தப்பட்டது. முதல் கடவை பாதியும் பின்னால் பாதியுமாக நடந்தது. முன்பாதியில் நடந்த கிராமங்களின் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு சிறிது கஷ்டம் அதிகமாயிருந்ததாகவும் பிற்பாதி நடந்த கிராமங்களின் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு சிறிது கஷ்டம் குறைவாக யிருந்ததாகவும் அறிவிக்கப்படுகிறோம். மேற்படி தாலூகா கி. உ. சங்கம் கேட்டுக்கொண்டிருந்த தின்பேரில் ஜில்லா கலெக்டர் போலீஸ் லயனில் ஆறு ரூம்கள் ரேஞ்சுக்கு ஒன்று வீதம் கிராம உத்தியோகஸ்தர்களின் உபயோகத்திற்காக கொடுக்கும்படி உத்தரவு செய்தார். இது குறிப்பிடத்தக்கது. மற்ற கி. உ. சங்கங்களும் பின்பற்றுமாக.

மன்னார்குடி தாலூகா ஜமாபந்தியானது டிவிஷனல் ஆபீஸர் மிஸ்டர் V. பொன்னுசாமி பிள்ளையால் நடத்தப்பட்டது. இத்தாலூகா கிராம உத்தியோகஸ்தர்கள் பட்ட அவஸ்தை மற்ற தாலூகாகளைவிட மிக அதிகமாகும். கல் சுற்றிப்பார்க்கும் மிக சாதாரண வேலையை இங்கு மகா முக்கியமானதாக கருதப்பட்டது மிகுந்த ஆச்சரியப்படக்கூடியதாயிருந்தது. சமீபத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் காரணமாக குறைவுபட்ட வேலைகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டது நியாயமாகாது அத்துடன் அபராதமும் 3 ரூபாய் ஒரு கர்ணத்துக்கு விதிப்பது சரியாகுமா? இதுவரையில் யாதொரு கண்டனத்துக்கும் உட்படாமல் சரிவர வேலைபார்த்து வந்த ஓபரிச்சேரி கர்ணம் ஸ்ரீமான் ராஜகோபாலய்யங்கார் என்னும் 42 வயதுள்ளவர் ரூ. 3 அபராதம் விதிக்கப்பட்ட மனவருத்தம் தாங்காமல் வயிறு கடுப்புநோய் வாய்ப்பட்டு மீளாமல் நமனுக்கிரையானார் என்பதைக்கேட்டு மிகவும் வருந்துகிறோம் அவர் குடும்பத்திற்கு நமது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம். கொத்தங்குடி கர்ணம் ஸ்ரீமான் முத்துவய்யர் சேரங்குளம் கர்ணம் ஸ்ரீமான் கோபாலய்யர் முதலிய சிலர்களுக்கும் வயறு கடுப்புநோய் கண்டு ஈஸ்வரகிருபையால் பிழைத்தனர். ஜமாபந்தியின் கொடுமை எவ்வளவு தூரம் கிராம உத்தியோகஸ்தர்களை பாதிக்கிறதென்பதை காட்ட இதைவிட வேறு திருஷ்டாந்தம் வேண்டுமோ?

கோபிரளயம் என்னும் கிராமத்தில் உளறலுக்கு மடங்கு தீர்வை விதிக்கப்பட்டிருக்கிறதாம் என்ன ஆச்சரியம் உளறலுக்கு தீர்வை விதிப்பதே நியாயமாகாது அப்படியிருக்க அதற்கு மடங்கு அபராதமாம். தண்ணீர் கசியாலிருக்கும்படி கெவர்ன்மெண்டார் செய்துகொள்ளுகிறதுதானே. அதிக கசிவினால் பயிர்கள் கெட்டுப்போகிறதே ஒழிய அதற்கு நன்மையில்லை என்பது அனுபவத்தில் கண்ட உண்மையாகும் இது மேலதிகாரிகள் கவனத்தைப் பெறுமாக.

பெருவாழ்ந்தான் என்ற கிராமத்தில் ரூ 400 வரை அபராத தண்ணீர் தீர்வை விதிக்கப்பட்டிருக்கிறதாம்.

இந்த டிவிஷனல் ஆபீஸர் கிராம உத்தியோகஸ்தர்களின் பரம்பரை பாத்தியதையை மிகவும் அலக்ஷியப்படுத்திவிட்டார். ஆதிதிராவிடர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்ற எண்ணங்கொண்டு தஞ்சை ஜில்லாவிற்கு பரம்பரை பாத்தியம் கிடையாது என்று வாய்கூசாமற் சொல்லி ரெவினியூ போர்டாருடைய உத்தரவையும் இதுவரையில் அனுஷ்டானத்திலிருந்து வந்த தர்மத்தையும் புறக்கணித்துவிட்டு கிராம உத்தியோகஸ்தர்கள் ஸ்தானத்தில் புதிதாக ஆதிதிராவிடர்களை நியமித்துவிட்டதானது இத்தாலூகாவில் மிகுந்த பரபரப்பையும் பீதியையும் உண்டாக்கியிருக்கிறது. ஆதிதிராவிடர்களுக்கு வேலைகொடுப்பதைப்பற்றி நாம் ஆக்ஷேபிக்கவில்லை வார்சு பாத்தியத்தை புறக்கணித்து விடுவதை நாம் கண்டிக்காமலிருக்க முடியாது. திருக்களர் கர்ணம் செய்துகொண்ட அப்பீலின்பேரில் கலெக்டர் வார்சு பாத்தியத்துக்கு சாதகமாக செய்த முடிவைக்கொண்டாவது இனி டிவிஷனல் ஆபீஸர் பரம்பரை பாத்தியதையை மதித்து நடப்பாரென்று நம்புகிறோம்.

கனம் S. முத்தையா முதலியார் மந்திரி ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டு விட்டபடியால் அவரால் கொண்டு வரப்பட்டிருக்கும் பரம்பரை மசோதாவை வேறு எந்த மெம்பராகிலும் பிரேரேபணை செய்து நிறைவேற்றி வைக்க வேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம். இந்தடிவிஷன் ஆபீஸர்செய்திருக்கிறதைக் கொண்டே இந்த ஜில்லாவிற்கு பரம்பரைபாத்தியம் சட்டப்படி ஏற்பட்டுவிட வேண்டிய அவசியமாகி விட்டதென்பதை கெவர்ன்மெண்டார் உணர்ந்து அதற்கேற்ற விதமாக பரம்பரை பாத்திய மசோதாவை சட்டமாக நிறைவேற்றி வைத்து விடுவார்களென்று நம்புகிறோம்.



## திருப்பனந்தாள் ஆதீனம்.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் ஸ்தாபகரான ஆதி ஸ்ரீ குமரகுருபர ஸ்வாமிகளின் குருபூஜை இவ்வருஷம் மிகச் சிறப்பாக நடந்தது. வீண் படாடோபங்களையும், தடபுடல் செலவுகளையும் குறைத்து அன்னதானத்திலும், வஸ்திர தானத்திலும் செலவிடப்பட்டதானது ஆதீனகர்த்தர்களான ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகளும், ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளும் கொண்டுள்ள தர்மசிந்தையின் மேன்மையையும் நிர்வாகத் திறமையையும் கல்வி யாராய்ச்சியில் அடைந்துள்ள நுண்ணறிவையும் விளக்காநின்றது. அன்றையதினம் நடந்த அன்னதானத்தைப்பற்றி எழுதுவதென்றால் சாத்தியமில்லை. புராணங்களில் அன்னக்கொடை பறந்ததென்றும், ஓயாது அன்னம் படைத்தாரென்றும் எழுதியிருப்பதெல்லாம் வீண் வர்ணனையோ வென்று ஐயுறுபவர்கள் இந்த அன்னதானத்தை நேரில் கண்டு நிவர்த்தித்துக்கொள்ளலாம். பல்லாயிரக் கணக்கான ஜனங்களுக்கு பந்திக்கு 300 ஜனங்கள் வீதம் 6 பந்தியாக பல தடவைகள் காலை பத்தரை மணிமுதல் மாலை 5 மணிவரையில் பரமாரப்பட்டதுடன் இலை போட்டு சாப்பிட இயலாத ஆதி திராவிடர்களுக்கும் நரிக்தொம்பர், குறவர் முதலிய இதர ஜாதியினருக்கும் ஏராளமாக வண்டியில் கொண்டுவந்து அளிக்கப்பட்ட காக்ஷியானது வர்ணிக்கமுடியாத காக்ஷியேயாகும். அன்னதானப் பலனை யறியவேண்டி ஒரு பிராமணச் சிறுவன் பரமசிவனைக் குறித்து தவம் செய்து அன்னதானப் பலனை அறிந்த விஷயத்தை இக்காக்ஷியைக்கண்ட நமக்கு ஞாபகம் வந்ததால் மற்றொரு பக்கத்தில் வரைந்திருக்கிறோம் காண்க. அப்பால் மாலை 5 மணிமுதல் ராத்திரி 11 மணிவரையில் வஸ்திரதானம் நடந்தது. சென்னை முதலிய இடங்களில் அன்னதான சமாஜங்களிலும் அன்னமளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அநேக சங்கீதக் கச்சேரிகளும் நடைபெற்றன. ரேடியோ என்னும் நூதனக் கருவியும் அமைக்கப்பட்டு கல்கத்தா, சிலோன் முதலிய இடங்களில் நடந்த சங்கீதங்களும் கேட்கும்படியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் காலைமுதல் ராத்திரி 2 மணிவரையில் ஆகாரங்கூட செய்யாமல் நின்றபடியே இத்தனை காரியங்களையும் நேரில் இருந்து நடத்திவைத்ததானது ஏழை ஜனங்களிடத்தில் அவருக் குண்டாயிருக்கும் அன்பின் பெருக்கையே எடுத்துக் காட்டுவதாகின்றது. "அன்பெனப் படுவது சொற்றிரம் பாமை."

ஆதீனக் கர்த்தாக்கள் இருவரும் கொண்டுள்ள உயர்ந்த நோக்கங்கள் அவர்கள் ஏற்படுத்தியுள்ள மூன்று விசேஷ தர்மங்களால் தெற்றன விளங்கும். கல்வியாராய்ச்சியில் சிறந்து விளங்கும் அவர்கள் ஆழ்ந்த யோசனை செய்து மடத்து ஸ்தாபகரின் கொள்கைகளுக்கு விரோதமில்லாமலும், பொதுஜன நன்மைக்கு அத்தியாவசியமானதும், சாசுவதமாய் நடைபெறக்கூடியதுமான முறையில் காலத்துக்கேற்ற விதமாய் ஏற்படுத்தியிருப்பதைக்கொண்டே அவர்கள் தேசத்தின்பாலும் தர்மத்தின்பாலும் கொண்டுள்ள உயர்ந்த நோக்கங்களை அறியலாகும். அந்த தர்மங்களைப்பற்றிய விபரங்களை மற்றொரு பக்கத்தில் காண்க. இம்மடாலய ஆதீனக் கர்த்தர்களின் நோக்கங்களை மற்ற மடாதிபதிகளும் பின்பற்றுவார்களானால் விசேஷமாகும்.

### மன்னார்குடி தாலூகா கி. உ. சங்கம்.

மேற்படி சங்கத்தின் மீட்டிங் திருநாட்டியத்தான்குடியில் 7—7—28ல் பிரசிடெண்டு ஸ்ரீமான் P. R. கல்யாணசுந்தரம் பிள்ளை அவர்கள் அக்கிராஸனத்தின்கீழ் நடந்தது. அநேக கிராம உத்தியோகஸ்தர்களும், ஸ்ரீமான் N. ஆபத்ஸகாய ஐயரும் விஜயம் செய்தார்கள். சென்ற மீட்டிங் நடவடிக்கைகளை டிஸ்டிரிக்ட் கலெக்டருக்கு அனுப்பியிருந்ததற்கு மேற்படியாரிடமிருந்து வந்த பதில் படிக்கப்பட்டு ரிகார்டு செய்யப்பட்டது. அதில் ஜமாபந்திபடி கொடுக்கமுடியாதென்றும், கல் பார்க்கவேண்டிய விஷயமான உத்தரவு சமீபத்தில்தான் பிறப்பிக்கப்பட்டபடியால் உடனே மாற்றமுடியாதென்றும், மரியாதையான பதங்களில் சர்க்குலர் எழுதவேண்டியவிஷயமாய் குறிப்பிட்டு டிப்டி கலெக்டருக்கு எழுதிக்கொள்ளும்படியும் கண்டிருந்தது. மற்ற விபரங்கள் யோஜிக்கப்பட்டு அடுத்த மீட்டிங்கில் முடிவுசெய்ய தீர்மானிக்கப்பட்டது. ஸ்ரீமான் பிள்ளை அவர்கள் தன் சகோதரியின் கல்யாண விஷயமாய் கவனிக்கவேண்டிய அபார வேலைகளின் மத்தியில் சங்கத்தையும் பெரிதாக மதித்து நடத்திவைத்தார்.

### விசேஷ கல்யாணம்.

நமது போஷகரும், கு. தா. கி. உ. சங்கம் பிரசிடெண்டுமான திருப்பனந்தாள் ஸ்ரீமான் T. S. துரைசாமி பிள்ளை அவர்களின் குமாரத்தி சௌபாக்யவதி மீனாக்ஷிக்கும், ஸ்ரீமான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளைக்கும் விவாகம் திருப்பனந்தாளில் மிக விமரிசையாய் நடைபெற்றது. தம்பதிகளின் பெயருக்கேற்ப ஸ்ரீமீனாக்ஷி கல்யாண கதா காலக்ஷேபம் ஸ்ரீரங்கம் பிரம்மஸ்ரீ சடகோபாச்சாரியாரால் செய்யப்பட்டது. மோட்டார் போட் ஊர்வலமும், சங்கீதக்கச்சேரிகளும் நடைபெற்றன. தம்பதிகள் நீடூழி வாழ்க.

மன்னார்குடி தாலூகா கி. உ. சங்கம் பிரசிடெண்டு ஸ்ரீமான் P. R. கல்யாணசுந்தரம் பிள்ளை அவர்களின் சகோதரியின் கல்யாணம் பாலாக்குரிச்சியில் மிக விமரிசையாய் நடைபெற்றது. லேடி பாகவதர் பன்னி பாய் ஹரிகதா காலக்ஷேபமும், சங்கீதக்கச்சேரிகளும், கோலாட்டமும் நடைபெற்றன. மோட்டார் ஊர்வலமும் சிறப்புற்று விளங்கின. தம்பதிகள் நீடூழி வாழ்க.

# கர்ணங்களில் உத்தமர்.

## பார்டோலி வரிகொடா இயக்கம்.

### ஒரு தாலாட்டியின் பதில்.

(கர்ணம்.)

ராஜிநாமாச்செய்த தாலாட்டிகள் தமது முன்பாக ஆஜராகவேண்டுமென்று சூரத் டிப்டி கலெக்டர் பிறப்பித்திருக்கும் நோட்டீஸுக்கு ஒரு தாலாட்டி (கர்ணம்) பின்வருமாறு பதில் அனுப்பியிருக்கிறார்:—

"நான் பட்டதாரன்று. நான் கிஸ்தி செலுத்த வேண்டியதில்லை. ஆகையால் வரிகொடா இயக்கத்தில் நான் சேரவேண்டியதில்லை. எனக்கு 45 வயதாகிறது. 22 வருஷம் சர்க்காரின் கீழ் வேலை செய்திருக்கின்றேன். 11 பேர்களடங்கிய குடும்பத்தை நான் காப்பாற்றவேண்டியவனாக இருக்கிறேன். இந்த வயதில் இன்னொரு வேலை கிடைப்பது சாத்தியமில்லை. இவ்வளவுபெரிய குடும்பத்தை எவ்விதம் காப்பாற்றுவதென்பது எனக்கே தெரியவில்லை இவ்வித நிலைமையில் இருந்தும் நான் ராஜிநாமாச் செய்திருப்பதற்கு எவ்வளவு பலமான காரணங்கள் இருந்திருக்கவேண்டுமென்பதை நீங்கள் தெரிந்துகொண்டிருக்கலாம். இருந்தாலும் இவ்வளவு அவமரியாதையான கடிதத்தை நீங்கள் எழுதியிருக்கிறீர்கள். இந்த 22 வருஷ சர்வீஸில் ஒருதடவைகூட நான் மேலதிகாரிகளுடைய கண்டனத்திற்கு பாத்திரமானதில்லை. 1921-ம் வருஷத்தில் ஒத்துழையாமை இயக்கம் ஓங்கியிருந்த காலத்திலும் நான் கவர்ன்மெண்டிடத்தில் பக்தியுடன் வேலை செய்து வந்தேன். அவ்விதமே இந்த இயக்க விஷயத்திலும் ஜீவகாருண்யத்தைமறந்தும் மேலதிகாரிகளுக்கு திருப்தியாக நான் நடந்துகொண்டு வந்தேன். ஆனால் யோக்கியப் பொறுப்புள்ளவர்கள் இனி உத்தியோகத்தில் இருப்பது சாத்தியமில்லை யென்பது தெரிந்து, ஜனங்களுக்கு விளைவிக்கும் கஷ்டம் சகிக்கமுடியாததாகிவிட்ட பிறகே நான் ராஜிநாமாச்செய்தேன். ராஜிநாமாக்கடிதத்தை மரியாதையாகவே நான் எழுதியிருக்கிறேன். கவர்ன்மெண்டார் தற்போதைய முறைகளையே இன்னமும் அனுஷ்டித்துவரின் தாலாட்டி வேலைக்கு ஒருவர்கூட இங்கு அகப்படமாட்டார்கள். ஆகவே உண்மையை வெளியிட்டதால் கவர்ன்மெண்டுக்கு ஹிதத்தைச் செய்ததாகவே நான் கருதுகிறேன். உண்மையை மறைக்கிறவர்கள்தான் கவர்ன்மெண்டுக்கு அபகாரம் செய்கிறவர்கள். இனி என்னுடைய ராஜிநாமாவை ஒப்புக்கொண்டாலும் என்னுடைய வேலையைவிட்டு என்னை விலக்கினாலும் எனக்கு அக்கரையில்லை. வேலையைவிட்டு என்னை விலக்கிவிடுவதே உத்தமமென்றே நினைக்கிறேன். உங்களுடைய முகத்தில் விழித்து சமாதானம் சொல்ல எனக்கு இஷ்டமில்லை மற்றவைகளுக்குக் கடவுள் இருக்கிறார். நான் ராஜத்துரோகியா, நீங்கள் ராஜத்துரோகியா வென்பது அவருக்குத்தெரியும்."

---

### கடிதம்.

#### கிராமானுகூலன் பத்திராதிபருக்கு.

ஐயா, ரூபாய் 2. மணியார்டர் அனுப்பியிருக்கிறேன். என்பெயருக்கு அனுப்பிவரும் கிராமானுகூலன் பத்திரிகையை தவராது அனுப்பிவரப் பிரார்த்திக்கிறேன். இதுவரையில் சந்தாதொகையை அனுப்ப தாமதித்து விட்டதற்கு மன்னிக்கவேணும் இந்த அரந்தாங்கி தாலூகா கிராமாதிகாரிகளில் அநேகர்கள் இப்பத்திரிகையை ஆதரிக்காமலிருக்கிறதை நான் எடுத்துக்காட்டியும் கவனிக்காமலிருக்கிறார்கள் நம் பத்திரிகையில் கொஞ்சம் இடம் தந்து இதைப்பற்றி எழுதவேணுமாய் பிரார்த்திக்கிறேன். இப்பத்திரிகை நீடித்து நடப்பதற்காக கடவுள் தங்கள் ஆயுளை விர்த்திசெய்யப் பிரார்த்திக்கிறேன்.

S. மகாலிங்க ஐயர்,
கர்ணம், ஆலத்தூர், அரந்தாங்கி.

இந்நண்பர் சந்தா தொகை அனுப்பியதற்கும், நம்பத்திரிகையின் அபிவிர்த்தியில் அவர்கொண்டிருக்கும் பேரன்பிற்கும் வந்தனமளிக்கிறோம். சகோதர கிராம உத்தியோகஸ்தர்களுக்கு நாம் அதிகம் சொல்லவேண்டியதில்லை அவரவர்களும் தன் சொந்த பத்திரிகையாக மதித்து "கிராமானுகூலன்" அபிவிர்த்தியில் அக்கரைகொள்ள வேண்டியது அவர்கள் கடமையாகும். கிராம உத்தியோகஸ்தர்களின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் பத்திரிகையை ஆதரிக்க அவர்கள் பின்வாங்கலாமா? சிறிய சந்தா தொகையாகிய இரண்டு ரூபாயை முன் பணமாக அனுப்பிவைத்தால் பேருபகாரமாயிருக்கும். ஒவ்வொருவரும் தாம் சந்தாதாராகி பணத்தை அனுப்புவதுடன் தவா ஒரு சந்தாதார் வீதம் சேர்த்துக்கொடுத்து நம் பத்திரிகையை செழித்தோங்குமாறு செய்வார்களென்று நம்புகிறோம்.

அரந்தாங்கி தாலூகா, அமரடக்கி கர்ணம், ஸ்ரீமான் R சவுந்திராஜய்யங்கார் மூன்று சந்தாதார்கள் சேர்த்து அனுப்பியிருக்கிறார் அன்னாருடைய பேரன்பிற்கும் வந்தனமளிக்கிறோம். [பர்.]



# கிராமப் பஞ்சாயத்துகள்.

## சில முக்கியமான குறிப்புகள்.

[நன்னிலம் தாலூகா போர்டு வைஸ்-பிரஸிடெண்டு ஸ்ரீயான் M. R. சாம்பசிவ ஐயர், B A.]

[94-வது பக்கத்தின் தொடர்ச்சி]

### தொழில் வரி.

இத்தாலூகாவில் மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய்க்குமேல் தொழில்களினால் வரும்படி அடைபவர்களுக்கு போடப்பட்டிருக்கும் வரிகள், அந்தந்த எல்லைக்குள் அந்தந்த பஞ்சாயத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த வரியை தாலூகா போர்டார் பிரதிவருஷம் விதிக்க கிராம உத்தியோகஸ்தர்களிடம் தொழில் செய்பவர் ஜாப்தாவும் முறையே அவர்கள் அடையும் வருமான ஜாப்தாவும் வாங்கி அதை ரிஜிஸ்திரார் ஜெனரல் அவர்களுடைய D. Dis No. 262 of 3-8-25 Circular படி பஞ்சாயத்தின் பரிசீலனைக்கு அனுப்புகிறார்கள். அவைகள் ஸரிவர போடப்பட்டிருக்கிறதா என்று பஞ்சாயத்து மீட்டிங்கில் பரிசீலனை செய்து, ஜாஸ்தி கம்மிக்கு தங்கள் அபிப்பிராயத்தையும் உடனே தாலூகா போர்டு பிரெஸிடெண்டுக்கு தெரிவிக்கவேண்டும். மணியகாரரிடமிருந்து ஜாப்தா கிடைத்த ஒரு வாரத்திற்குள் பஞ்சாயத்தைக்கூட்டி பஞ்சாயத்தின் அபிப்பிராயத்தை தாலூகா போர்டுக்கு தெரிவிக்க வேண்டியதுமுக்கியம். இவ்விதம் செய்தால் பின் அப்பீல்கள் அதிகம் ஏற்படுவதற்கு நியாயமிராது. இதேவிதம் மேற்படி வரிவிதிக்கப்பட்டவர்கள் அப்பீல் செய்துகொண்டாலும், தாலூகாபோர்டிலிருந்து அப்பீலைப்பற்றின வரையில் பஞ்சாயத்தின் அபிப்பிராயம் கேட்பார்கள். அதையும் உடனே பரிசீலனை செய்து பஞ்சாயத்துகள் திருப்பிஅனுப்பவேண்டும். தாலூகா போர்டு ப்ரெஸிடெண்ட் அவர்கள் வரியை வசூலித்து செலவுபோக பாக்கியை பஞ்சாயத்து நிதிக்கு சேர்ப்பார்கள். இந்த ஜாப்தாக்கள் பஞ்சாயத்தினிடம் தங்கவே கூடாதென்பது முக்கியமாய் கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

### லைசென்ஸ்.

லோகல் போர்டு சட்டம் 193-வது செக்ஷனில் சில அபாயகரமான தொழில்களுக்கு லைசென்ஸ் தாலூகா போர்டில் பெற்றுக்கொண்டுதான் மேற்படி தொழில்கள் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றது.

ஒரு பஞ்சாயத்து எல்லைக்குள் மேற்படி தொழிலை யாராவது செய்வாராகில், அவர்களிடம் லைசென்ஸுக்கு ஏற்பட்ட தொகையைப் பெற்றுக்கொண்டு, உடனே மேற்படி தொழிலாளியின் லைசென்ஸ் அப்ளிகேஷனை தாலூகா போர்டு பிரெஸிடெண்ட் அவர்களுக்கு அனுப்பவேணும். அவர்களிடமிருந்து கிடைக்கும் லைசென்ஸை கைதொழில் செய்பவரிடம் கொடுக்கவேண்டும். Vide R.G S. Circular.

### எல் எப். 2 ஸி. மரங்கள்.

இவைகளிலிருந்து தாலூகா போர்டுக்கு கிடைக்கும் வரும்படிகளும் (பஞ்சாயத்து எல்லைக்குள்) பஞ்சாயத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது ஒவ்வொரு பஞ்சாயத்து பிரஸிடெண்டும், இவ்வரி செலுத்துபவருடைய ஜாப்தா, தாலூகா போர்டிலிருந்தாவது, கிராம கர்ணத்திடமிருந்தாவது பெற்றுக்கொண்டு, தாங்களே அந்த வரியை வசூலித்து பஞ்சாயத்து நிதியுடன் சேர்க்கவேண்டும். கொடாதவர்களிடம் கிராம முனிசீபைகொண்டு வசூல் செய்யலாம். Vide G. O. No. 4780 L. & M. 10-11-27.

### L. F. ரஸ்தாக்கள்.

அல்லாட்மெண்ட் ஏற்கனவே விவரித்தபடி இத்தொகையைப்பெற்று, ரோட்டுகளை நன்றாக பராமரித்து, மிகுதியாகும் லாபத்தை பஞ்சாயத்து நிதியுடன் சேர்க்கலாம். ஜில்லா போர்ட் ரோட்டில்

இருக்கும் அவினியூ மரங்கள் வரும்படியையும், பஞ்சாயத்தில் குத்தகை விட்டு பஞ்சாயத்து நிதியுடன சேர்க்கவேண்டும். அந்த ரோட்டுகளிலும் மேலும் மரங்களை விருத்திசெய்து, வருமானத்தை உயர்த்த முயலவேண்டும்.

### பஞ்சாயத்துகள் மீட்டிங் கூடுவதற்கும், அலுவல்கள் செய்வதற்கும், அனுஷ்டிக்க வேண்டிய முறைகள்.

ஒவ்வொரு பஞ்சாயத்தும் மாதம் ஒரு முறையாவது கூடவேண்டும். விசேஷ காரியங்கள் ஏற்படும்போது பிரெஸிடெண்ட் உடனே மீட்டிங் கூட்டவேண்டும். ஷை மீட்டிங்கில், பிரெஸிடெண்ட் சென்ற மாதத்திய கணக்குகளை ஆஜர்செய்து அடுத்த மாதத்திற்கு ஆகக்கூடிய செலவிற்கும் ஸாங்க்ஷன் பெறவேண்டும். ஏதாவது ஒரு வரி விதிப்பதென்றால் அந்த மீட்டிங்கை விசேஷக் கூட்டமாகக் கூட்டி மொத்தத்தில் பாதிக்கு குறையாத பஞ்சாயத்தார்கள் கூடி தீர்மானிக்கவேண்டும். தீர்மானம் ஆன உடன் அந்த வரி விகிதத்தையும் இன்ன காரியத்திற்காக வரி விதிக்கப்பட்டதென்பதையும் கிராமத்தில் பிரஸித்தம் செய்து, ஆபீஸிலும் எல்லாரும் பார்க்கும்படி ஒட்டவேண்டும். உடனே ஷை மீட்டிங் நடவடிக்கைகள், ரிஜிஸ்ட்ரார் ஜெனரல் அவர்களுக்கு பஞ்சாயத்து ஆர்கனைஸர் மூலம் அனுப்பவேண்டும். பிறகு 15 நாள் கழித்து மற்றொரு ஸ்பெஷல்மீட்டிங் கூட்டி, அந்தமீட்டிங்கில் கிராமத்தில் அந்தவரியை யாரேனும் ஆக்ஷேபித்தால் ஆக்ஷேபனையையோசித்து, பின் அந்தவரியை ஊர்ஜிதம்செய்து தீர்மான நகலை முன்சொன்னபடி அனுப்பவேண்டும். வரியை இந்த மீட்டிங்கில் உயர்த்துவதென்றால் பின்ஒருதேதிபோட்டு அந்தமீட்டிங்கில்தான் பிரஸித்தம் செய்து மறுபடி ஆக்ஷேபனைகளை விசாரித்து ஊர்ஜிதம் செய்யவேண்டும். ஊர்ஜிதமான தீர்மான நகல் Vide R. C 22-2-23 யுள்ள மெமோரான்டம் R Dis No. 32 கிடைத்த உடன் வரி ஸாங்க்ஷன் ஆகக்கூடும், வரி ஸாங்க்ஷன் ஆன உடன் ஒரு வரி ஜாப்தா தயார்செய்து மீட்டிங்கில் வைத்து பிரஸித்தம் செய்யவேண்டும். அதற்கும் ஆக்ஷேபனைகள் இருந்தால் விசாரித்து முடிவு செய்த உடன் வரி ஜாப்தா புஸ்தகத்தில் பதிந்து, பிரெஸிடெண்ட் நேரில் வசூல் செய்யலாம். அல்லது மணியக்காரரைக்கொண்டு வசூலிக்கலாம். எந்த காரியத்திற்காக வரி வசூலிக்கப்படுகிறதோ அந்த காரியத்திற்குதான் அந்தந்த வரியை உபயோகிக்கவேண்டும்.

கூடியவரையில் நம் தாலூகாவில் பஞ்சாயத்துகள் கிராம பொது ஊழியத்தில் எவ்வளவு ஈடுபடலாமென்பதும் கிராம முன்னேற்றத்திற்கு எவ்வளவு செய்யக்கூடுமென்பதும விவரிக்கப்பட்டிருக்கிறது. நமது தாலூகாவில் சுமார் ஒருபாதி கிராமங்களுக்கு பஞ்சாயத்துகள் ஏற்பட்டு விட்டன. பஞ்சாயத்துகள் ஏற்பட்டு ஒரு காரியமும் கைக்கொளளாமலிருப்பது பஞ்சாயதது ஏற்படுத்தின காரியம் பலிதமாகாததோடு பஞ்சாயத்து செய்யாமலிருப்பது கிராமத்திற்கும் கிராமத்திலுள்ளோர்க்கும் ஒரு அவச்சொல்லாகும். நிதானமாக ஒவ்வொரு பஞ்சாயத்தாரும் நம் கிராமத்தில் ஏற்பட்டிருக்கும் பஞ்சாயத்து ஸபலமாக வேண்டுமென்ற பிடிவாதமான எண்ணத்தோடு, பஞ்சாயத்தை நடத்தினால் இவைமாத்திரமன்று, இன்னும்மேலான அதிகாரங்களையும், ஆதிக்கியத்தையும் பெற நமக்கு உரிமையுண்டு மறுப்பதற்கு அரசாங்கத்தாரும் கூட செயலற்றவர்கள். இவ்விதமான அலுவல்களை கவனித்து நன்கு முடிப்பதோடு கிராமத்தில் பஞ்சாயத்தார்க்குள்ள செல்வாக்கைக்கொண்டு, ராட்டினம் சுற்றுதல் முதலிய முக்கியமான கைத்தொழிலை அபிவிருத்திசெய்து, குடியைக் குறைக்கவும் ஏற்பட்டால், காலஞ்சென்ற நமதுதேசத்தலைவர் தேசபந்து கைக்கொண்ட கிராம புனருத்தாரண வேலையை நாம் நமது தாலூகாவில் செய்து முடித்தவர்களாவோம். இப்போது ஏற்பட்டிருக்கும் பஞ்சாயத்துகள் இவ்விதம் வேலைசெய்ய ஸங்கல்பித்துக் கொள்ளுமாகில், இத்தாலூகாவில் பஞ்சாயத்தில்லாத கிராமமே ஆறுமாத காலத்தில் காணமுடியாது. நம் தாலூகா மாத்திரமன்று. நாம் இவ்விதம் நடத்துவதில் சித்திபெறும் பக்ஷத்தில் நம் ஜில்லாவிற்கே நமது மாகாணத்திற்கே ஒரு வழிகாட்டி ஆகக்கூடும். ஆகையால் ஒவ்வொரு பஞ்சாயத்து பிரஸிடெண்டும் ஒவ்வொரு பஞ்சாயத்தாரும் நமது பஞ்சாயத்து முன்னேற்றமடையவேண்டும். நமது பஞ்சாயத்து கூடிய திட்டங்களை ஒழுங்காக முடிக்கவேண்டுமென்றும் பிடிவாதமான முயற்சியுடன் பஞ்சாயத்துகளை நடத்தி கிராம க்ஷேமம் கிராமத்தாரையேதான் பொறுத்தது என்பதை நிரூபிப்பதோடு நம்மிடம் ஒப்புவிக்கப்படும் அதிகாரங்களை நாம் சரிவர முடிக்க வல்லவரல்லர் என்று சொல்லித்திரிபவர் அவச்சொல்லை பொய்யாக்கி நமது தாலூகாவிலுள்ள ஒவ்வொரு கிராமமும் வாஸத்திற்கு ஏற்றதென்று உலகத்தார் மதிக்கும்படி நமது பஞ்சாயத்து வேலை செய்யுமென்பது எம்போன்ற இத்தாலூகா அபிமானிகளின் வேண்டுகோள்.



# கிராம புனருத்தாரண திட்டம்.

(கனம். வி. ராமதாஸ் பந்துலு அவர்கள், B.A, B.L., ராஜாங்கசபை, மெம்பர்.)

16-வது சென்னை மாகாணக் கூட்டுறவு மகாநாடு கிராமப்புனருத்தாரண வேலையைக் கூட்டுறவுச் சங்கங்களைக்கொண்டு நடத்தவேண்டுமென்று தீர்மானித்தது. இதனால் கூட்டுறவுச் சங்கங்கள் இவ்வேலையை உடனே மேற்போட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றன. மாகாண முழுவதும் இவ்வேலையை நடத்துவதென்பது சாத்தியமில்லை. தீர்மானத்தில் 6 இடங்களில் இவ்வேலையை நடத்தவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. வரும் கூட்டுறவு வருஷத்தில் இதற்கதிகமான இடங்களில் இவ்வேலையை ஆரம்பிப்பதென்பது முடியாது. 6 ஜில்லாக்களைத் தெரிந்தெடுத்து ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு பிர்க்காவைத் தெரிந்தெடுக்கவேண்டும். முதல் வருஷத்தில் மேற்குக் கடற்கரை ஜில்லாக்களை விட்டு விடுவது உசிதமென்று நினைக்கின்றேன். ஏனெனில் இங்கு கிராமங்கள் பிரிந்து பிரிந்திருக்கின்றன. பஞ்சாயத்து திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதே கஷ்டமாக இருந்தது. ஆந்திர தேசத்தில் 3 இடங்களிலும் தமிழ் நாட்டில் 3 இடங்களிலும் இவ்வருஷம் கிராமப்புனருத்தாரணத் திட்டத்தை அமுலுக்குக்கொண்டு வரவேண்டுமென விரும்புகின்றேன். ஒவ்வொரு பிர்க்காவிலும் கிராம புனருத்தாரண வேலைகளை மேற்பார்வையிட பயிற்சி பெற்ற சூப்ரவைசர் ஒருவர் இருக்கவேண்டும். பிர்காவின் தலைநகரும் கூடுமான வரை கூட்டுறவு மேற்பார்வை யூனியன் தலைநகராகவே இருக்கவேண்டும் யூனியன் சூப்ரவைஸரும் புனருத்தாரண வேலைக்கார சூப்ரவைஸரும் கலந்து வேலைசெய்ய முடியும். தெரிந்தெடுக்கப்படும் இடம் மையமானதாக இருக்கவேண்டும். இது ரெயில், ரஸ்தா அல்லது கால்வாய் இவற்றிற்குச் சமீபமாக இருக்கவேண்டும் அப்பொழுதுதான் இப்புனருத்தாரணத் திட்டத்தில் சிரத்தையுள்ள கிராமத்தலைவர்கள் இவ்விடத்திற்கு அடிக்கடி வர சாத்தியமாக இருக்கும் கிராமப்பஞ்சாயத்து கூட்டுறவுச்சங்கம் இவையுள்ள கிராமமாக இருந்தால் மிக்க உசிதமாக இருக்கும் கூட்டுறவு யூனியனின் தலைமை ஆபீஸ் அசௌகரிமான இடத்தில் இருந்தால் அது கிராமப்புனருத்தாரணக் கூட்டத்திற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட இடத்திற்கு மாற்றப்பட வேண்டும். பிரசாரத்தின் மூலமும் கல்வி போதிப்பதன் மூலமும் கிராமவாசிகளுடைய மனோபாவத்தை மாற்றவேண்டும். முக்கியமாக சமூக பொருளாதாரத்துறையில் அவர்களது மனோபாவம் மாறுதலடையும்படி செய்யவேண்டும். கிராமவாசிகளுக்கு தர்மமாகப் பணத்தைகொடுத்தாலுஞ்சரி சொற்ப வட்டிக்குக் கடன்கொடுத்தாலும் சரி அவர்களுள் பிறர் கையை எதிர்பார்த்து நிற்கும் தன்மையே அதிகரிக்கும். கூட்டுறவுக்கொள்கை மனதில் பதியும்படி பண உதவி செய்யும்பொழுதே செய்யவேண்டும் அவ்வாறு செய்யாவிட்டால் அவர்களது நிலைமை கேவலமாகிவிடும். புனருத்தாரணத் திட்டம் கிராம சம்பந்தமாகக் கொண்டுள்ள எல்லா விஷயங்களையும் மனதில் கொண்டிருக்க வேண்டும். மிஸ்டர் ஹொரேஸ் பிளங்கெட் தயாரித்துள்ள முக்கியமான 10 தேவைகளை நமது ஸ்தலத்தேவைகளுக்குத் தகுந்தபடி திருத்தியமைத்துக்கொள்ள வேண்டும். முக்கியமாகப் பின்வருமாறு செய்ய வேண்டும்:—சூப்ரவைசர் ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டுறவுச் சங்கத்தையும் கிராமப்பஞ்சாயத்தையும் ஆரம்ப பள்ளிக்கூடத்தையும் வைத்தியசாலை ஒன்றையும் ஏற்படுத்தவேண்டும். வைத்தியசாலை ஆயுர்வேத வைத்தியசாலையாக இருக்கலாம். பிர்கா முழுவதற்குமாக ஒரு நில அடமான பாங்கு ஏற்படுத்த வேண்டும். சட்டபூர்வமாக ஏற்படும் கிராமப்பஞ்சாயத்தே கிராமப் புனருத்தாரண வேலைகளைச்செய்வ

தற்கான முக்கிய சாதனமாகக் கொள்ளப்படவேண்டும். மற்றெந்த ஸ்தாபனமும் எல்லாவேலைகளையும் செய்யக்கூடியதாக இல்லை. சட்ட ஆதாரமில்லாமல் சுயேச்சையின் காரணமாக ஏற்படும் ஸ்தாபனங்கள் ஏற்படுவதும், நிலைத்து நிற்பதும் கஷ்டமாகும். 1920-ம் வருஷத்துச் சட்டப்படி கிராமப்பஞ்சாயத்து பலர் சேர்ந்த ஸ்தாபனமாகும். பொது நன்மைக்கான காரியங்களைச் செய்வதற்கு அது வரி விதிக்க அதிகாரமளிக்கிறது. ரெஜிஸ்திரார் ஜெனரல் குறிப்பிடுகிறபடி கிராமத்தின் தேவையைப் பூரணமாக உணர்ந்து கிராம வாழ்க்கைச் சௌகரியங்களை விருத்தி செய்யவேண்டிய நடவடிக்கைகளை கிராமப் பஞ்சாயத்துகள் எடுத்துக்கொள்ளக்கூடும். கிராமஊழியர்கள் அதன் கீழ் இருப்பார்கள். கிராம கோவில்களைப் புதுப்பித்தல் குளங் கிணறுகளை நல்ல ஸ்திதியில் வைத்துக்கொள்ளல், கிராமப்பொது சொத்துக்களையும் தர்மங்களையும் நிர்வகித்தல் முதலியவை பஞ்சாயத்துகளின் வேலையாகும். கூட்டுறவு ஸ்தாபனங்கள், லோகல் போர்டுகள் கவர்ண்மெண்ட் இவற்றிடமிருந்து பணம் வந்தால் அதை வாங்கி உபயோகித்துக்கொள்ளலாம். பிர்காவிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் தம்முடைய பொதுநலநிதியிலிருந்து கிராமப் புத்தகசாலையை நடத்துவதற்குச் சிறிது பணங்கொடுத்து உதவலாம். கவர்ண்மெண்டார் கிராமங்களில் பஞ்சாயத்துப் பள்ளிக்கூடத்தை ஏற்படுத்த முதலில் 80 ரூபாயும் அதில் வேலைபார்க்கும் ஒவ்வொரு உபாத்தியாயருக்கும் வருஷம் 180 ரூபாய் வீதம் கிராண்டும் கொடுக்கின்றனர். கிராமப் புனருத்தாரண வேலைக்காகத் தெரிந்தெடுக்கப்படும் பிரதேசத்தில் கட்டாய இலவச ஆரம்பக்கல்வி முறை அமுலுக்கு வரவேண்டும். இம்முறையை மாகாண கெவர்ண்மெண்டும் ஏற்றுக்கொண்டிருக்கின்றது. இப்பள்ளிகளில் கட்டாய முறையில் சுதேச தேகாப்பியாசங்கள் அளிக்கப்படவேண்டும். கிராமத்தார்களே, ரஸ்தாக்களின் பராமரிப்புக்கும் ஆகும் செலவில் பாதியைக்கொடுப்பதாக இருந்தால் கவர்ண்மெண்டார் மற்றொரு பாதியைக்கொடுக்கின்றார்கள். கூட்டுறவுச் சங்கங்களையே விவசாயக்கைத்தொழிலின் தேவைக்கு வேண்டிய முதலையும் கடனையும் கொடுத்து விவசாயிகளுக்கு உதவும்படி செய்யக்கூடும். கூட்டுறவு முறையில் விதைகளையும் எருக்களையும் வாழ்க்கைக்கவசியமான முறைகளையும் கிராம வாசிகளுக்கு உதவவேண்டும். நல்ல விலை வரும் காலம் வரை காத்திருந்து விளைபொருள்களை விற்கும்படி செய்யவேண்டும் ஒவ்வொரு பிர்காவிலும் ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டு அதிலுள்ள விவசாயிகளின் கடன்களை எல்லாம் மேற்கொண்டு கிராமக்கடன் சங்கங்கள் மூலமும் நில அடமான பாங்கு மூலமும் அக்கடன்களைத் தீர்க்கும்படி செய்யவேண்டும். கிராமப் புனருத்தாரண சூப்ரவைசர் மிருக வைத்தியர் விவசாய டிமான்ஸ்டிரேட்டர் இவர்களுடனும் மற்றும் சுற்றுப் பிரயாணஞ்செய்யும் இதர உத்தியோகஸ்தர்களுடனும் சம்பந்தம் வைத்துக்கொண்டு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். இப்பிரதேசத்திலுள்ள எல்லா கிராமங்களிலும் பாமர ஜனங்களுக்குக் கல்வி போதிக்கவேண்டும். இக்கிராமங்களில் முக்கியமாக இருந்த கைத்தொழில்களுக்குப் புத்துயிரளிக்க முயற்சிசெய்ய வேண்டும். கை ராட்டினத்தில் நூல் நூற்கும்படி செய்யவேண்டும். கைத்தறியில் நெசவு செய்யும்படி செய்யவேண்டும். ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் வீட்டு வசதிகளைத் திருத்தவேண்டும். அவர்களுக்கு இதர சௌகரியங்களையும் செய்யவேண்டும். இவை புனருத்தாரணத் திட்டத்தின் முக்கியாம்சமாக இருக்கவேண்டும். ஒடுக்கப்பட்ட வகுப்பார் கிராமப் பஞ்சாயத்து போர்டுகளுக்குத் தாராளமாகத் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். கிராமப் பள்ளிக்கூடங்களில் இவர்கள் சேர்க்கப்பட வேண்டும். திட்டம்போட்டு ஒரு ஸ்தாபனமுமிருந்தால் இவற்றை எல்லாம் சுலபமாக நிறைவேற்றிவிடலாம்.

### செலவுக்கு வகை செய்யும் விதம்

கூட்டுறவுச் சங்கங்களின் வருவாய் குறைவாக இருக்கின்றபடியால் ஒவ்வொரு புனருத்தாரணகூடத்தின் செலவும் வருஷத்திற்கு 2000 ரூபாக்குமேல் செல்லக்கூடாது. அந்தப்பிரதேசத்திற்குள்ள சென்டிரல் அர்ப்பன் பாங்கி 1000 ரூபாய்கொடுக்கவேண்டும் சென்னை செண்டிரல் பாங்கும் இவ்வேலைக்காக கிராம புனருத்தாரணக் கூட்டம் ஒவ்வொன்றுக்கும் 1000 ரூபாய் கொடுக்கவேண்டும் இம்மாதிரி சென்னை செண்டிரல் அர்பன் பாங்கு 5000 ரூபாய் செலவிடவேண்டியிருக்கும் வருஷம் சரா சரியாக 1500 ரூபாக்குமேல் கிடைக்கும் பொது நல நிதியிலிருந்து இப்பணத்தை ஒதுக்கலாம். சூப்ரவைசருடைய சம்பளம் உப்பளம் முதலியன மாதம் 100 ரூபாக்கு மேற்படக்கூடாது. 15 ரூபாய் சம்பளத்தில் அவருக்கு ஒரு சேவகனிருக்கவேண்டும். துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவதற்காக மாதம் 30 ரூ கொடுக்கவேண்டும். இம்மாதிரி ஒவ்வொரு புனருத்தாரணத்திற்கும் வருஷம் 2000 ரூபாய் செலவிடவேண்டியிருக்கும். கூட்டுறவு சம்மந்தமான விஷயங்களில் யூனியன் சூப்ரவைஸர் இந்தசூப்பரின்டெண்டிற்கும் உதவி செய்யவேண்டும். ஸ்தலஸ்தாபனங்களுக்கு கிராம புனருத்தாரண நிதியை ஏற்படுத்த ஆக்கமளிக்கப்பட்டு வரப்படுகின்றது. கிராமவாசிகள் அதிகப்படி வரியை ஏற்றுக்கொள்ளவிருப்பமில்லாதவர்களாக இருக்கின்றபடியால் இத்தகைய நிதியை ஏற்படுத்தும் உத்தேசம் இன்னும் கைகூடவில்லை. ஒவ்வொரு தாலூகா போர்டும் நிலசெஸ்ஸில் ரூபாய்க்கு 1 பைவீதம் அதிகப்படிவரிவிதித்து அதன்மூலம் அதிகப்படியாகக்கிடைக்கும் தொகையைகிராமப்புனருத்தாரண வேலைக்காக ஒதுக்கிவைத்தால் வருஷம் $5\frac{1}{2}$ லக்ஷரூபாய் கிடைக்கும். கவர்மெண்டாரும் $5\frac{1}{2}$ லக்ஷரூபாய்கொடுப்பார்கள். கிராமப்புனருத்தாரண வேலைக்கு வருஷம் 11 லக்ஷரூபாய்கிடைக்கும். இதனால் வரிவிதிக்கும் விஷயமாக மறுபடியும் கிராமவாசிகளின் அபிப்பிராயத்தைத்தெரிவிக்கவேண்டும்.

நடுத்தர ஸ்திதியிலுள்ள படித்த இந்தியர்கள் கிராமப் பிரச்சினையில் எவ்வளவு சிரத்தை எடுத்துக்கொள்ளுகின்றார்களோ அவ்வளவு தூரம் இத்திட்டம் முன்னேற்றமடையும் தேசீய கவர்ன்மெண்டார் புத்திசாலிகளான ஆயிரக்கணக்கான வாலிபர்களை இவ்வேலைக்கு நியமித்து அவர்களுடைய அறிவு தேசிய புனருத்தாரணத்திற்கு உதவும்படி செய்திருப்பார்கள். தற்கால நிலைமையில் அவ்வாறெல்லாம்நடக்குமென்று எதிர்பார்ப்பது வெறும்பகற்கனவே ஆகும். கவர்ன்மெண்டார் மாகாணக்கப்ப வாஜாமூலம்கிடைத்த $8\frac{1}{2}$ கோடி ரூபாயை ஒதுக்கப்பட்ட இலாகாக்களுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டிலிருந்தே அவர்களுக்கு தேசோத்தாரண வேலைகளில் எவ்வளவு அசிரத்தை இருக்கிறதென்பது விளங்கும். நடுத்தரவகுப்பினரில் சிலரேனும் தேசத்திற்குத் தாங்கள் செய்யவேண்டியகடமைகளை உணர்ந்து அவற்றைச்செய்யத் தீர்மானித்தால்போதும். அதனால் விசேஷ அபிவிருத்தி ஏற்படக்கூடும். இந்தியாவில் ஏராளமாகஜனங்களிருக்கின்றனர். அவர்களை ஒருங்குதிரட்டவேண்டியதுதான தற்பொழுதுள்ள தேவையாகும். இவ்வேலையைச்செய்யும்படி கோரப்படுகின்றவர்கள் பொறுப்புணர்ந்தவர்களை கொண்டதாயும் புதுயிர் பெற்றதாயும் உள்ள கிராமங்களே நிரந்தரமான சுயராஜ்ஜியத்திற்கு அடிப்படை என்பதை உணரவேண்டும்.

### கும்பகோணம் தாலுகா
### கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம்.

ஷை சங்கத்தின் மீட்டிங் ஒன்று 20--5--28ல் கும்பகோணம் சகாஜிநாயக்கன்தெரு திருப்பனந்தாள் மடம் சத்திரத்தில் கும்பகோணம் உள்ளூர் கிராமமுன்சீப் ஸ்ரீமான் பெரியதம்பி நாடார் அக்கிராசனத்தின்கீழ் நடந்தது மெம்பர்கள் அதிகமாக வராததைமுன்னிட்டு 27--5--28ல் இதே இடத்தில் கூடுவதாக தீர்மானிக்கப்பட்டு மீட்டிங் கலைந்தது

ஷை மீட்டிங் 27—5—28ல் கும்பகோணம் சகாஜிநாயக்கன்தெரு திருப்பனந்தாள் மடம் சத்திரத்தில் முள்ளங்குடிகர்ணம் ஸ்ரீமான் சீனிவாசய்யர் அக்கிராசனத்தின்கீழ் நடந்தது. அநேக கிராமஉத்தியோகஸ்தர்களும் "கிராமானுகூலன்" எடிட்டர் ஸ்ரீமான் N ஆபத்சகாயமய்யரும் விஜயம் செய்தார்கள். கிராம உத்தியோகஸ்தர்களின் நிலைமையும், கடமையும் என்னும் வியாசம் கிராமானுகூலன் பத்திரிகையிலிருந்து வாசிக்கப்பட்டது.

சங்கத்தின் அனுகூலங்களைப்பற்றியும் பரமக்குடி கான்பரன்ஸைப்பற்றியும் காரியதரிசியால் உபன்யாசிக்கப்பட்டது.

ஸ்ரீமான் N ஆபத்சகாயமய்யரால் ஒற்றுமைஎன்னும் விஷயம் உபன்யாசிக்கப்பட்டது.

"கிராமானுகூலன்" பேப்பரை ஒவ்வொரு அங்கத்தினரும் தவறாது வரவழைக்க வேணுமென்றும் ஒவ்வொரு மீட்டிங்கிற்கும் தவறாமல் விஜயம்செய்ய வேண்டியதென்றும் தீர்மானம் செய்யப்பட்டது.

மீட்டிங்கிற்கு விஜயம்செய்த கனவான்களுக்கும், இடவசதி செய்துகொடுத்த மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சொக்கலிங்கத்தம்பிரான் சுவாமி அவர்களுக்கும் அக்கிராசனாதிபதியவர்களால் வந்தனம் கூறப்பட்டு மீட்டிங்கலைந்தது

அடுத்தமீட்டிங் 1-7-28ல் நாச்சியார்கோவில்ரோஞ்சு செம்மங்குடியில்நடத்துவதாகதீர்மானிக்கப்பட்டது.

# கிராமங்களில் உண்மையான நிர்மாண வேலை.

பாலையூர் சக்தி நிலயம்.

(ஸ்ரீமான் K. ராஜகோபாலய்யர்)

## வருஷாந்திர அறிக்கை

இந்நிலயம் அக்ஷயவருஷ தைமீ பௌர்ணமியன்று மன்னார்குடி தாலுக்கா பாலையூர் என்னும் கிராமத்தில் பாமணியாற்றங்கறைக்கு மேல்கறையில் ரமணீயமான தோட்டத்தில் கிராமப் புனருத்தாரண வேலை செய்வதற்கென்றே சுயநலமற்ற தியாகிகளால் ஸ்தாபிக்கப்பட்டது. ஐந்து ஊழியர்கள் இதில் வஸித்து நடத்திவருகிறார்கள்.

## இதன் நோக்கம்

மகாத்மா காந்தியடிகளின் உயர்ந்த கொள்கைகளை கிராமங்களில் பரப்புதல், கிராமங்களில் இராட்டினத்தைப் புகுத்தி கதரை விரிவாகப் பரவச்செய்தல், தேசத்தின் பொருளாதார நிலைமையை உயர்த்தப் பாடுபடுதல், தாழ்த்தப்பட்டவர்களுக்கு வேண்டிய உதவியளித்தல், தேசியக்கல்வியளித்தல், எங்கும் சர்வசகோதர உணர்ச்சியை உண்டாக்குதல், சர்வசமயங்களிடத்தும் ஒற்றுமையையும், அன்பையும் பெருக்குதல், கிராமங்களில் ஐக்கியநாணய சங்கங்கள் பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தல் முதலியன. இன்னம் பஞ்சு உற்பத்தி செய்வது, பட்டைபோட நூற்க கற்றுக்கொடுத்தல், கதரை கிராமங்களில் கொண்டுபோய் தூக்கி விற்றல், சுகாதார விஷயங்களைப்பற்றி கிராமங்களில் பிரசாரம் செய்தல்; ஏழை மக்களுக்கு இலவச வைத்திய உதவிசெய்தல் முதலியனவும் அடங்கியதாகும்

## ஆதரவு

பல மிராசுதார்களாலும், தனவர்களாலும் பொருளுதவி செய்யப்பட்டு நடந்து வருகிறது. மகாத்மா காந்தியடிகளார் அடிக்கடி உபதேசம்செய்து ஆதரித்து வருகின்றார். மாதாமாதம் இவ்வாச்ரமத்தார் செய்துவரும் வேலைவிபரம் மகாத்மாவுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

## இவ்வாண்டில் செய்த வேலைகள்

### கல்வி

வித்தியாலயம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு தேசிய முறையில் கல்வியளிக்கப்பட்டு வருகிறது. 20 சிறுவர்கள் படித்துவருகிறார்கள். கணக்கு, பூகோளம், தமிழ், இங்கிலீஷ் முதலியனவும், சுகாதார விஷயங்களும், நல்லொழுக்கமும் போதிக்கப்படுகின்றது, நூல் நூற்கவும், பட்டை போடவும் கற்றுக்கொடுக்கப்பட்டு வருகிறது. வேதம், சாஸ்திரசம்மந்தமான கல்வியுமளிக்கப்படுகிறது. தினம்தோறும் காலைமாலைகளில் பிரார்த்தனை தேகப்பயிர்ச்சி முதலியனவும், முறைவைத்தல், தோட்டங்களுக்கு தண்ணீர் இறைத்தல், கூட்டிப் பெருக்குதல் முதலியனவும் கற்றுக்கொடுக்கப்படுகிறது. இவ்வாச்ரமத்தின் நோக்கத்திற்குத் தகுந்த மாணவர் இல்லாதக்குறைவைத் தவிர வேறு ஒருகுறைவு கிடையாது. இதை இருவர் நடத்தி வருகின்றனர்.

### கதர்.

கிராமங்களில் கதர் தூக்கி விற்றல், பஞ்சுகொடுத்து நூல்வாங்குதல் முதலியவேலைகளை ஸ்ரீமான் ராமகிருஷ்ணய்யர் என்பவரால் நடத்தப்படுகிறது. கிராமங்களுக்குச்செல்ல வண்டியும், மாடும் கொடுத்து உதவப்படுகிறது. இவ்வாண்டில் ரூ. 2883-5-5 க்கு கதர் கிராமங்களில் விற்பனை செய்யப்பட்டு வந்திருக்கிறது. ரூ. 297-0-0 க்கு கதர் உற்பத்தியும் ரூ. 100-0-0 க்கு நூல் உற்பத்தியும் செய்யப்பட்டு இருக்கிறது. 12 ராட்டினங்கள் சுற்றுகின்றன.



### பிரசாரம்.

சுகாதாரத்தைப் பற்றியும், கதரின் அவசியத்தைப் பற்றியும், மது ஒழித்தலைப் பற்றியும் கிராமங்களில் பிரசாரம் செய்யப்பட்டு வந்திருக்கின்றன.

### மது ஒழித்தல்.

வடசேரி என்னும் கிராமத்தில் எங்களுடைய பிரசாரத்தின் பயனாக சுமார் 150 பேர் வரையில் குடியை நிறுத்தியிருக்கிறார்கள். இந்தக் கிராமம் ரொம்பவும் கட்டுப்பாடான முறையில் நடந்து வருகிறது. ஷை கிராமத்தார் மீண்டும் கட்குடியில் இறங்காவண்ணம் அக்கிராம பஞ்சாயத்தார்களே கவனித்து வருகிறார்கள். அடிக்கடி நாங்கள் அங்கு சென்று வேண்டிய உதவியளித்து வருகிறோம்.

### பஞ்சாயத்து.

பாலையூர், சித்தமல்லி, வடசேரி இம்மூன்று இடங்களிலும் கிராமப் பஞ்சாயத்து சபைகள் ஏற்படுத்தியிருக்கிறது. முன்னவை இரண்டும் சர்க்கார் சம்மந்தமுள்ளதும், பின்னது சர்க்கார் சம்மந்தமற்றதுமாகும். பாலையூர் பஞ்சாயித்து மூலியமாக கிராமங்களிலுள்ள குளம், குட்டைகளை ஜலம் போட்டும்; ஸ்நான பானத்துக்கு குளம் பிரத்தியோகப்படுத்தியும், வெகுநாட்களாக மூடிக்கிடந்த மாரியம்மன் கோவிலைத்திறந்து பூஜைவைத்தும், உத்ஸவாதிகள் செய்தும், சுகாதார விஷயங்களைப்பற்றி கவனிக்கப்பட்டும், கிராமத்திலுள்ள சில்லரை சச்சரவுகளை நீக்கியும், இன்னும் சில முக்கியமான காரியங்களும், செய்யப்பட்டு வந்திருக்கின்றன. அன்பும், சகோதர உணர்ச்சியும் உண்டாக்கியிருக்கிறது மற்ற கிராமங்களிலிருந்து எங்களுக்கு தகவல் கிடைப்பது சாத்தியமில்லை. ஆனால் அவர்களது வேண்டுகோளுக்கிணங்கி அடிக்கடி சென்று உதவிசெய்து வருகிறோம்.

### ஐக்கிய நாணய சங்கம்.

பாலையூரில் ஐக்கிய நாணயசங்கம் ஒன்று ஸ்தாபித்து ஒரு வருஷத்திற்குள்ளாக ரூ. 10000, வரையில் கடன்கொடுத்து உதவியிருக்கிறது. இதனால் ஏழைகளுக்கு ஏற்பட்டிருக்கும் வட்டித் தொல்லை நீங்கி, சௌகரியத்தை அடைந்திருக்கிறார்கள். ஜாஸ்தி வட்டிக்கு கொடுக்கும் முதலாளிகள் சிலர் நீங்கலாக ஏனையோர்களுக்கு மிகுந்த நன்மை ஏற்பட்டிருக்கிறது- இச்சங்கம் இவ்வாச்ரம அங்கத்தினர்களாலேயே நடத்தப்பட்டு வருகிறது.

### வாசகசாலை.

தேசபந்துவின்ஞாபகார்த்தமாகஒருவாசகசாலை, ஏற்படுத்தப்பட்டு சுமார் 300 புஸ்தகங்களும், பல தினசரி வாராந்திர மாதாந்திர பத்திரிகைகளும் வந்திருக்கின்றன. இவைகள் படிப்பதின்மூலமாய் நல்ல ராஜீய, மதஞானம் உண்டாயிருக்கிறதென்பது மிகையாகாது.

### இதர விஷயங்கள்.

அடிக்கடி கிராமங்களில் சுற்றுப் பிரயாணம் செய்து அவர்களின் குறைகளினை அறிந்துவருவதும் வேண்டிய உதவியளிப்பதும் செய்துவருகிறோம். இவ்வாச்ரமத்தில் ஒரு கீதைவகுப்பும், குறள் வகுப்பும் ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறோம். இதுபோன்ற பல காரியங்களை பல கிராமங்களில் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம். பல கிராமத்தார்களின் உதவியும், தலைவர்களுடைய உதவியும் இருக்கும் பக்ஷத்தில் நல்ல வேலை செய்யலாம்.

இவ்வாண்டில் வருஷபூர்த்தியன்று ஸ்ரீமான் சத்தியமூர்த்திஐயர், ஸ்ரீமான் மருதவாணம் பிள்ளை, ஸ்ரீமான் K. S சிவசுப்பிரமணியஐயர், ஸ்ரீமான் சூ. சூரியநாராயணஐயர் முதலியவர்கள் விஜயம் செய்து எங்களை ஆசீர்வதித்தும், பாராட்டியும், ஆதரவளிப்பதாகவும் சொல்லியிருக்கின்றார்கள்.

மகாத்மாகாந்தி, ஜம்னுலால் பஜாஜ், ஸ்ரீமான்கள் S. சத்தியமூர்த்தி ஐயர், C V வெங்கட்ரமண ஐயங்கார், F. G. நடேசய்யர் முதலியவர்கள் எங்களைப் பாருட்டி ஆசிமொழியும் அனுப்பியிருக்கின்றனர்.

### விண்ணப்பம்.

இக்கிராமப் புனருத்தாரணவேலையைச்செய்கையில்காட்ட இந்த ஆச்ரமம் ஒன்றே இப்பொழுது தமிழ்நாட்டில் இருந்துவருவதால் இதை ஆதரித்து நடத்த தமிழ்நாட்டார் மிகவும் கடமைப்பட்டுள்ளார்கள். இதைப் பார்க்கும் ஒவ்வொருவரும் தங்கள் தங்களால் இயன்றமட்டும் எந்தவிதத்திலும் உதவிசெய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். இவ்வறிக்கையை பிரசாரம் செய்ய ஒப்புக்கொண்ட "கிராமானுகூலன்" பத்திராதிபர் ஸ்ரீமான் ஆபத்ஸகாய ஐயருக்கு எங்கள் நன்றி உரியதாக. ஒவ்வொருபத்திரிக்கையிலும் எங்கள் நடவடிக்கைகளின் விபரத்தை பிரசுரிப்பதாக ஒப்புக்கொண்டு இருப்பதால் ஷை பத்திரிகையை ஆதரிப்பதன்மூலமாக எங்கள் நடவடிக்கைகளையும் ஒருவாறு அறியலாம்.

மகாத்மா காந்தி வாழ்க! வந்தேமாதரம்!!

---

### கிராம உத்தியோகஸ்தர்களின் ராஜீநாமா.

பர்டோலி தாலூகாவைச் சேர்ந்த 40 படேல்களும் 8 தாலாட்டிகளும் (கிராம உத்தியோகஸ்தர்கள்) பர்டோலியில் அதிகாரிகள் சட்டவிரோதமான செயல்களைச் செய்து வருவதைக் கண்டிப்பதற்கறிகுறியாக ராஜீனாமாக் கடிதங்களை அனுப்பியிருக்கின்றனர், இவர்களில் சிலர் 25 வருஷ சர்விஸுக்கு மேப்பட்டவர்கள். படேல்கள் (கிராமமுன்சீப்கள்) தங்களுடைய ராஜீநாமாக் கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:—

சென்ற 2 மாதங்களாகச் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுவதையும் கால் நடைகள் பலவிதமாகத் துன்புறுத்தப்படுவதையும், அச்சுறுத்தப்படுவதால் ஜனங்கள் பயந்து வாழ்ந்து வருவதையும் நாங்கள் கண்ணாரக்கண்டிருக்கின்றோம். கவர்ன்மெண்டார் நீதி வழங்குவார்களென்று நாங்கள் நம்பினோம் ஆனால் சமீபத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில் கவர்ன்மெண்டார் இன்னும் அதிகமான அடக்குமுறைகளைக் கையாளப்போவதாக எச்சரித்திருக்கின்றனர். அதில் பட்டாணியர்கள் மிக்க ஒழுங்காக நடந்து கொள்ளுகிறார்களென்று நற்சாட்சிப் பத்திரமும் கொடுத்திருக்கின்றார்கள். இத்தகைய முறையினால் கவர்ன்மெண்டாருக்கு உண்டாகக்கூடிய சொல்லொணாத் துன்பங்களை நினைத்துப்பார்க்கும் பொழுதே எங்களுக்கு நடுக்க முண்டாகின்றது. நாங்கள் இந்த அடக்குமுறைகளை எல்லாம் சும்மா பார்த்துக்கொண்டிருப்பதைவிட எங்கள் பதவிகளை ராஜீநாமா செய்துவிடுவதே சிறந்ததென்று கருதுகின்றோம்.

இன்னும் பல ராஜீநாமாக்கள் வரக்கூடும்.

---

### "கிராமானுகூலன்"

விளம்பர விகிதம்.

கிராமானுகூலனில் விளம்பரம் செய்வோர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். ஏராளமான சர்க்குலேஷன் மிக குறைந்த சார்ஜ். வியாபாரிகள், தங்கள் விலாசத்தை மாத்திரம் 1 அங்குலத்தில் விளம்பரம் செய்வதாயிருந்தால் 1 வருஷத்திற்கு 3 ரூபா தான் சார்ஜ். இந்த நூதன முறையானது கைத்தொழில் விருத்திக்கு இன்றியமையாதது. சொல்ப செலவில் நல்ல விளம்பரம்.

| | மாதம் 1க்கு | 8க்கு | 6க்கு | 1வருஷம் |
|---|---|---|---|---|
| முழுபக்கம் | 10-0-0 | 24-0-0 | 86-0-0 | 60-0-0 |
| அரைபக்கம் | 5-0-0 | 12-0-0 | 18-0-0 | 80-0-0 |
| கால்பக்கம் | 2.8-0 | 6-0-0 | 9-0-0 | 15-0-0 |
| 1அங்குலம் | 0-8-0 | 1-4-0 | 2-0-0 | 8-0-0 |
| டைட்டில் பக்கம் | 16-0-0 | 40-0-0 | 60-0-0 | 96-0-0 |
| அரைபக்கம் | 8-0-0 | 20-0-0 | 30-0-0 | 48-0-0 |

விளம்பரம் செய்வோர்கள் முன்பணமனுப்ப வேண்டும்.

மானேஜர்,
"கிராமானுகூலன்"
மருதாந்த நல்லூர், திப்பராஜபுரம் போஸ்டு.



# ராணாபிரதாபசிம்மன்.

அல்லது

## "ரஜபுத்திர தேச பக்தி."

(ஸ்ரீமான் S. மஹாலிங்க சர்மா சிறைவாஸத்தில் எழுதியது.)

[ All Rights Reserved ]

(101-வது பக்கம் தொடர்ச்சி)

### ஐந்தாவது அத்தியாயம்.

சிறப்பிலும், விஸ்தீர்ணத்திலும் ராஜபுதன நாடுகளில் மீவாரம் ஒன்றே தலைமையானது. ராணா சங்கரசிம்மன் ஆண்டகாலத்தில் இந்த சமஸ்தானங்கள் எல்லாவற்றிலும் மீவாரமே அதிக புகழுடையதாக இருந்தது. ஆனால் பிரதாபன் அரியணையில் ஏறிய காலத்தில், நிலைமை முற்றிலும் மாறுபட்டிருந்தது. பிரதாபன் தன் வாழ்நாளில் முன்னேறிய விதத்தையும், மீவாரத்துக்கு அவனால் ஏற்பட்ட அழியாத புகழையும் பற்றி நாம் கூறுவதற்கு முன்னால், அவன் பட்டமேற்ற காலத்தில் ராஜபுதன நாடுகள் எந்த வகைய நிலைமையில் இருந்தன என்பதைப்பற்றி கூறவேண்டியது அவசியமாகின்றது.

மாருவாரம் அல்லது மார்வார் என்ற நாடு மீவாரத்திற்கு வட மேற்கிலுள்ளது. அந்நாட்டில் புகழ்படைத்த மன்னர் பலர் துருக்கர்களுக்கு விரோதமாக இருந்து தம் நாட்டையும், ராஜபுதனத்தின் பெயரையும் காப்பாற்றி வந்திருக்கின்றனர். முக்கியமாக மகாராஜா மாலதேவன் என்பவன் காலத்தில் அந்நாடு செப்புதற்கரிய சிறப்புடையதாக இருந்தது. ஆப்கானிய வம்சத்தைச்சேர்ந்த ஷேர்க்கான் என்பவனால் உமாயூன் தோற்கடிக்கப்பட்டு, நாடுவிட்டு ஓடியபொழுது, அவனைச் சிறைப்படுத்தி தண்டிக்க நினைத்தவனும் இவனே. ஆயினும் இவன் குமாரனாகிய இளவரசன் உமாயூனுடைய பரிதாப நிலையைக்கண்டு மனம் இரங்கி ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டான் என்பதை முன்பு ஒரு அத்தியாயத்தில் கூறியிருக்கிறோம்.

உமாயூன் வெளியே ஓடிவிட்ட பிறகும், மாலதேவன் சும்மா இருக்கவில்லை. டில்லியில் அரசாளத்தொடங்கிய ஷேர்ஷாவையும் எதிர்த்து நின்று இந்த ஏகாதிபத்தியத்தை மீளவும் நிலைநாட்டி, அன்னியரை நாட்டைவிட்டுக்கடத்தி விடவேண்டுமென்று விருப்பங்கொண்டனன். இரண்டொரு இடங்களில் அவனுக்கும் ஷேர்ஷாவுக்கும் பெரும்போர் நடந்தது. பிறகு சில காலத்திற்கெல்லாம் சித்தூரில் ரணகளத்தில் ஷேர்ஷா காயம்பட்டு இறந்துவிட்ட பிறகு அவனுக்குப்பின் வந்த உபயோகமற்ற சந்ததியார்களுடைய பலஹீனத்தையறிந்து, உமாயூன் திரும்பி வந்து டில்லியில் முடிசூடினன் என்பதை நாம் ஒருவாறு அறிந்திருக்கிறோம். அக்காலத்திலுள்ள ரஜபுத்திர அரசர்களில் மாலதேவன் ஓர்பெரிய போர் வீரனாகவும் புகழ்படைத்த மன்னனாகவும் இருந்தனன்.

மாருவார நாட்டிற்கு நேர் வடக்கில் ஆம்பர் என்னும் ராஜபுத்ர சமஸ்தானம் இருக்கின்றது. அந்நாட்டை பரிபாலித்த மன்னருள் ராவ்விகாரி மல்லன் என்பவன் சற்றுப்பெயர் படைத்தவனாக இருந்தான். பேராண்மையும் வீரமும் அவனிடத்தில் நன்கு வாய்ந்திருந்தபோதிலும் ஓர் ரஜபுத்திரனுக்கு இன்றியமையாத ஜாதியபிமானமும், சுதந்தர ஆசையும், ஆசார சீலமும் அவனிடத்துச்சிறிதும் இல்லை.

டில்லி பாதுஷாவாகப் பெயர்பெற்றுவிளங்கிய அக்பர் சிறு குழந்தையாக இருக்கும் பொழுதிலிருந்து அவனை விகாரி மல்லனுக்கு நன்கு தெரியும். தம்மிடத்துச்சிறிது நேரம் பழகிய எவரையும், தம்முடைய மாயவலைவீசி கருப்புமையையே ஓர் விஷமாகத் தீட்டப்பெற்ற கண்கள் என்னும் அம்புகளால் வீழ்த்திக்களிக்கின்ற வேசியர்போல் சிறிது நாள் தன்னிடத்து பழகிய எவரையும், தன் சாமர்த்தியத்தினாலும், சதுரமான வார்த்தைகளாலும் மயக்கி, தன் இஷ்டப்படி அவர்களை ஆட்டிவைப்பதில் அக்பர் மிகவும் பெயர்போன மன்னன்.

பலநாள் நெருங்கிப்பழகிய விகாரி மல்லனை அக்பர் முற்றிலும் தன்வசமாக்கிக் கொண்டான் என்பதைக் கூற வேண்டிய அவசியமென்ன? நாட்கள் செல்லச்செல்ல

விகாரி மல்லனுக்கு அக்பரிடத்து அளவிடற்கரிய ப்ரேமை உண்டாயிற்று. தான் இந்து மதத்தைச் சேர்ந்த ராஜபுத்திரன் என்பதை மறந்தான் புகழ்பெற்ற ராஜபுதனத்தின் சுதந்திரத்திற்கு முகம்மதியர்கள் சத்துருக்களாகத் தோன்றியிருப்பதையும், அவர்களுடைய மதவெறிக்கும் அக்பருடைய நயவஞ்சகத்திற்கும் ஆளாகாது நிற்கவேண்டியது அவசியமென்பதையும் அவன் உணர்ந்தானில்லை. விதியின் வழியே மதியும் சென்றது. அக்பரிடத்து தனக்குள்ள விசேஷப்பிரியத்துக்கு அடையாளமாக அழகிற் சிறந்த தன்மகளை அக்பருக்கு கலியாணம் செய்துகொடுத்தான். அந்த கலியாண தினத்தில் விசேஷ வாத்ய முழக்கங்களும், சந்தோஷ ஆரவாரங்களும் டில்லி பாதுஷாவின் அரண்மனையில் உண்டாயிருக்கலாம். ஆனால் அதே நிமிஷத்தில் விகாரி மல்லனின் அந்தரங்க ஹ்ருதயத்திலுள்ள ஆத்மா படபடவென்று அடித்துக்கொண்டிருந்தது. அதே சமயத்தில் ரஜபுத்திர ஜாதியின் குலதேவதையான பவானி தேவியும் கையைத் தலைமீது வைத்து, ஒரு துளி கண்ணீரை விட்டனள். இந்தக் கலியாணத்தின் பயனாகத்தான் அக்பருக்கு, ஸலீம் (ஜிகாங்கீர்) என்ற மகன் தோன்றினான்.

தனக்கு உற்ற நண்பனாய் விளங்கி தன் அழகிய மகளையும் மணம் செய்துகொடுத்த விகாரிமல்லனிடத்தில் அக்பருக்கும் ஓர் விஸ்வாசம் ஏற்பட்டது. உயர்ந்த பட்டங்களையும், பரிசுகளையும் வழங்கி, ராணுவத்தில் பெரியதோர் பதவியையும் அளித்தான். விகாரிமல்லனுக்குப்பிறகு பகவான்தாஸ் என்ற அவன் குமாரன் பட்டமடைந்தான். அவனும் தன் தந்தையைப்போலவே, அக்பரிடத்தில் நேசமும், மொகலாயரிடத்தில் மோகமும்கொண்டவனாக இருந்தனன். விகாரிமல்லனுக்கு பகவான்தாஸ் தவிர வேறொரு மகன் உண்டு அவன் மூலமாக மானசிம்மன் என்ற பௌத்திரன் ஒருவன் அவனுக்கு இருந்தான். எல்லோரும் அக்பருடைய சமஸ்தானத்தில் பெருஞ்சிறப்படைந்தவர்கள். பகவன்தாஸ் அக்பருடைய ஆருயிர் நண்பன். அவனுடைய சகோதரி அக்பருடைய பட்டமகிஷி. அவனுடைய மருமகனாகிய மானசிம்மன் அக்பருக்குவலது கைபோன்றவன். இப்படி ராஜபுத்ர அரச குடும்பத்தினரான ஒரு சிறுகூட்டத்தார் அக்பருடன் உறவாடி காலங்கழிப்பதை பெரும்பேறாகக்கொண்டு வாழ்ந்து வந்தனர். அக்பரும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ராஜா என்ற அழகிய பட்டத்தைக்கொடுத்து, ராணுவத்தில் உயர்ந்த பதவியில் இருத்தினான். ராஜா மானசிம்மன் 7000 குதிரைப் படைக்கு தலைவன். பகவான்தாஸ் 5000 குதிரைப்படைக்கு தலைவன்.

ஆம்பர் நாட்டின் ராஜபுத்திரர்களான இவ்விருவரும் தங்கள் வாழ்நாளை அக்பரின் பொருட்டு அர்ப்பணம் செய்தனர். கொடிய விதிவழியே அவர்கள் மதியும் சென்று, ராஜபுதனத்தின் சுதந்தரத்துக்கும், நல்வாழ்விற்கும், நாசத்தை நாடிய அக்பருக்கு அவர்கள் இரண்டு துணைக்கரங்கள்போல் விளங்கினர். பெரும்புகழ்பெற்ற வீரர்களான அவ்விருவரும் தம் அறிவை இழந்து, அன்னியரின் குடையின்கீழ் ஆட்பட்டுநின்று, தாய்நாட்டுக்கு துரோகிகளாக ஆகாமல் இருந்திருப்பின், ராஜபுதனத்தின் சரித்திரமும், மொகலாய சரித்திரமும், அக்பர் பாதுஷாவின் கீர்த்தியும் வேறுவிதமாக எழுதப்பட்டிருக்கும்.

முதன் முதல் அக்பருடைய ஆதிக்கத்தை ஒப்புக்கொண்டு, தலைகுனிந்து நிற்க மனம்கொண்டநாடு, ஆம்பர் நாடேயாகும். அதற்கு காரணமாயிருந்த விகாரிமல்லனையும், அவனுக்குப்பின்வந்த பகவான்தாஸ், ராஜா மானசிம்மன் முதலியவர்களையும் நாம் எளிதில் மறக்கமுடியாது. முக்கியமாக ராஜா மானசிம்மனைப்பற்றி வரப்போகும் பக்கங்களில் நாம் விசேஷமாகப் படிக்கலாம்.

மாருவாரத்தில் மாலதேவன் அன்னியருக்கு விரோதமாக ஆண்மையுடன் முதன் முதல் நின்றான் என்று கூறினோமல்லவா? பெருத்ததோர் சேனைகளுடன் இந்துஸ்தானத்தில் புகழ்சிறந்த பாதுஷாவாக விளங்கிய அக்பரையும் அவன் சும்மா விட்டுவிடவில்லை. தன் சாமர்த்தியத்தை வெளிக்காட்டி, மொகலாயர் செருக்கை அடக்க வேண்டுமென்பது அவன் விருப்பம். அக்பரும் மார்வார நாடு தனக்கு விரோதமாக நிற்பதையும், அதன் அரசனான மாலதேவன் அதிக புகழ்பெற்ற ரஜபுத்திரவீரன் என்பதையும், அவனால் தன் தகப்பனாகிய உமாயூன் பெரிய கஷ்டங்களுக்கு உட்படுத்தப்பட்டான் என்பதையும்கண்டு உணர்ந்து கொண்டான்.

பெரிய பராக்கிரமசாலியான மாலதேவன் மீது யுத்தத்திற்குச்சென்றால் தனக்கு பெருத்த கஷ்டம் ஏற்படக்கூடுமென்று அவனுக்குப்பட்டது. ஆனால் பகவான்தாஸும், ராஜா மானசிம்மனும் தனக்குத் துணையாக நின்று போர்க்களத்தில் பிரகாசிப்பார்கள் என்ற தைரியத்தினாலும் வைரம் வைரத்தை வெட்டும் என்றபடி ரஜபுத்திரரும் ரஜபுத்திரரும் விரோதப்பான்மையுடன் சண்டைசெய்யுங்கால், மொகலாயப்படைகள் வெற்றியடைவது திண்ணம் என்று அவனுக்குப்பட்டது. உடனே புறப்பட்டான். பெருத்ததோர் சேனையுடன் அக்பர் தன்மீது படையெடுத்து வரும் சங்கதியை அறிந்த மாலதேவனும் சும்மா இருக்காமல் தன் அரிய படைகளைத் திரட்டிக்கொண்டு, அக்பரை மைத்திரேயம் என்ற ஊருக்கருகில் சந்தித்தான்.

223470



அந்த இடத்தில் மாருவாரத்தின் வீரர்களுக்கும் மொகலாயருக்கும் பெருத்ததோர் சண்டை நிகழ்ந்தது. அந்தச் சண்டையில் அக்பரே வெற்றிகொண்டான். ரஜபுத்திர சேனைகள் பின்னடைந்தன. ஆனால் மாலதேவன் இந்த அபஜெயத்தினால் மனம் தளர்ந்துவிடாமல் மறுபடியும் ஒருமுறை அக்பரை எதிர்க்க முயற்சிசெய்தான். தன் படைகளை மீண்டும் பலப்படுத்தினான். மீண்டும்ஒருமுறை ஜோதிபுரிக்கருகில் இரண்டாவது யுத்தம் ஏற்பட்டது. வீராவேசத்துடன் இருதரப்பினரும்போர்புரிந்தனர். மாலதேவனை தோற்கடித்து, தன் தந்தையாகிய உமாயூனுக்கு அவனால் சேர்ந்த கஷ்டங்களுக்கு பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்துடன் போர்புரிந்தான் அக்பர். அவன் எண்ணம் வெற்றிகொண்டது. இரண்டாமுறையும் மாலதேவன் தோற்கடிக்கப்பட்டான்.

மறுபடியும் யுத்தத்தை தொடங்குவதற்கு அவனுக்கு சக்தியேனும், தைரியமேனும் இல்லாமல் போயிற்று. அக்பரின் சாமர்த்தியத்துக்கு முன்னால் தன் பேராண்மை வெகு அற்பமானதென்று கருதினான். தீவினையும் அவன் மதியை மயக்குவித்தது. தன்னையொத்த அரசனும் ஆம்பர் நாட்டின் தலைவனுமாகிய பகவான்தாஸ் அக்பருடன் சேர்ந்துகொண்டு, அதனால் பெரியதோர் பதவியில் ஆனந்தமாக இருந்துகொண்டு பெருவாழ்வு வாழ்வதை நினைத்தான். அவன் மனம் மாறியது. அக்பரிடம் தனக்குண்டாயிருந்த குரோதத்தையும், பகைமையையும் உடனே நீக்கினான் தன்னுடைய நாட்டின் க்ஷேமம், அக்பருடைய கையில் இருப்பதாக அவனுக்குத்தோன்றியது. உடனே தன் மகனும், இளவரசனுமாகிய உதயசிம்மன் என்பவனை அக்பரிடம் அனுப்பி, தான் அவனுடன் சிநேகம் செய்துகொண்டு சமாதானமாக வாழ விரும்புவதாகவும், பழய போராட்டங்களை மறந்துவிட வேண்டுமென்றும், அக்பரை சக்கிரவர்த்தியாக ஒப்புக்கொண்டு கப்பம்செலுத்த உடன்படுவதாகவும் தெரிவித்தான்.

இதைக்கேட்ட அக்பர் பெரிய உளமகிழ்ச்சிகொண்டு தனது வெற்றியைக்காட்டிலும், மாலதேவனின் நட்பு தனக்குக்கிடைத்தது தனது பாக்கியவசமே என்று நினைத்தான். புதிதாக ஏற்பட்ட சிநேகம், ஆரம்பத்தில் வெகு பலமாக இருக்குமன்றோ! அச்சமயத்தில் ஓர் காரியம் செய்து அந்த சிநேகம் கெடாமல் இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொள்ளவேண்டும் என்று கருதினான். ஆம்பர் நாட்டின் ராஜபுத்திரியை விவாகம் செய்துகொண்டு ராஜா பகவான்தாஸையும், ராஜா மானசிம்மனையும் தனக்கு ஒப்பற்ற துணைவர்களாகவும். ஆருயிர் நண்பர்களாகவும் சேர்த்துக்கொண்டதுபோல் மாருவார நாட்டின் அரசகுடும்பத்தையும் மொகலாய சிம்மாஸனத்துடன் ஒன்றுசேர்த்து பிணிப்பதற்கு உபாயம் என்னவென்று ஆலோசித்தான்.

முன்னர் ராஜா விகாரிமல்லனுடைய புத்திரியை விவாகம் செய்துகொண்டு அவள் மூலமாக அக்பருக்கு ஸலீம் (ஜிஹாங்கீர்) என்றபெயருடன் புத்திரன் ஒருவன் பிறந்ததாகக் கூறினோமன்றோ! அந்தஸலீம் இப்பொழுது நல்ல வாலிபத்தில், மணம்செய்விக்கவேண்டிய தருவாயில் இருந்தனன். மாலதேவன் குமாரனாகிய உதயனுக்கு பேரழகுவாய்ந்த பெண்ணொருத்தி இருந்தனள். அவள்பெயர் ஜோதிபாய் என்பது. அவள் தனது பெயருக்கேற்ப ஒளிபோன்ற எழில் வனத்துடன் ராஜபுதனத்தில் பிரகாசித்தனள். அன்னவளை தன் குமாரனாகிய ஸலீமுக்கு மணம் செய்விக்கவேண்டுமென்று கருதினான் அக்பர்.

வேற்றரசருக்கு வசப்பட்டு விதியினால் மதியிழந்து, வீணராய்நிற்கும் வேந்தருக்கு வெட்கம் என்பதும் உண்டோ! அக்பரின் கருத்தை அறிந்த மாலதேவனும், உதயனும் அவனுடைய விருப்பத்தின்படியே ஜோதிபாயை ஸலீமுக்கு அளிக்க இசைந்தனர். குறித்தநாளில் கடிமணம் என்ற கொடுவினை ஒருவாறு நிறைவேறியது. அம்மணவினையில் பெரும் மகிழ்வுகொண்ட அக்பர், மாலதேவனுக்கும் அவன் மகன் உதயனுக்கும் சிறப்புகள் பலஅளித்து, பாராட்டினான்.

அம்மட்டுமோ? புதிதாக கொத்வாரம், உஜ்ஜயினி; தெவலபுரம்; பத்மபுரம் முதலிய 4 மாகாணங்களையும் மாலதேவனுக்கு அளித்து, மாருவாரத்தின் விஸ்தீரணத்தை இரட்டிப்பாக்கினான். அந்நாட்டின் செல்வம் அதிகரிக்கும்படி, மேற்சொன்ன மாகாணங்களிலிருந்து வருடா வருடம் வரிப்பணமாக 30 லக்ஷம் ரூபாய் கிடைத்தது. புதிய நாடுகளும், பெருத்த செல்வமும், உயர்ந்த பதவியும் ஒருங்கேகிடைத்ததாயினும், உயிரினும் அரிய தம் குலப்பெருமையை மாருவார அரசகுடும்பத்தினர் வீணேயிழந்தனர். அன்னியனுக்கு பெண்ணளித்து ஆடம்பரவாழ்க்கைபெற்ற பெரும் பேடிகளாகவும், தாய் நாடாகிய ராஜபுதனத்தின் சுதந்தரத்திற்கு விரோதமாகநின்று, வேற்றரசனான அக்பருடன் உறவாடி, நாட்டை உதாசீனம் செய்த துரோகிகளாகவும், அக்குடும்பத்தினர் விளங்கினர். அறக்

கடவுள் தூற்றவும், சுதந்தரதேவதை சபிக்கவும் என்றும் அழியாத பழிக்கு ஆளாகின்றனர். மாருவாரத்தின் நிலைமை இவ்வாறிருந்தது.

முதலாவதாக ஆம்பர் நாடும், அதற்குப்பிறகு மாருவாரமும் அக்பரின் சூழ்ச்சியில் அகப்பட்டுக்கொண்டதை ஒருவாறு கூறினேம். இன்னும் ராஜபுதனநாட்டில் ஆங்காங்கு அரசுசெலுத்திய சிற்றரசர்களில் பலரும் ஒருவர் பின்ஒருவராக தத்தம்பெருமையையிழந்து, அக்பருக்குத் தலைவணங்கி வெட்கமற்றவாழ்க்கையில் ஈடுபடலாயினர். இன்னும் பலர், தாங்கள் பெற்ற குலமங்கையரை அக்பரின் அந்தபுரத்துக்கு அனுப்பவேண்டியதாயிற்று. அக்பரும் உருசிகண்ட பூனையாகி, ராஜபுத்திரிகளை கூட்டம் கூட்டமாக தன் அந்தப்புரத்தில் கொண்டுவந்து சேர்க்கவும் ராஜபுதனநாட்டின் சுதந்தரத்தை அடியுடன்வேரறுக்கவும் உறுதிகொண்டான். கலிகாலமும் அவனுக்குத் துணைநின்றது. சிறிதுகாலத்திற்குள்ளாகவே, அக்பரின் தந்திரமும், வஞ்சகமும் வெற்றியடைந்தன. அதர்மமும், அக்கிரமமும், பாபமயமான இந்நிலவுலகில் சிறிதுகாலம் தலையெடுத்து நிற்பது ஓர் ஆச்சரியமோ! ஆனால் காருண்யமூர்த்தியான கடவுள் உரியகாலத்தில் அவற்றை அடக்கி அழித்து சுட்டெரித்து, மீண்டும்சத்தியத்தையும், தர்மத்தையும் ஸ்தாபிக்கின்றார். இன்றேல் மொகலாய அரசபரம்பரை மறுபடியும் அடையாளம்கண்டுபிடிக்கமுடியாதபடி இவ்வளவு சீக்கிரத்தில் மண்ணில் மறைந்து அழிந்து போயிருக்குமா?

இது நிற்க அக்பரின் ஆதிக்கம் நாளுக்கு நாள் அதிகரிக்கத்தொடங்கியது. புதிதாக ஏற்பட்டு ஆடம்பரத்துடன்விளங்கிய மொகலாய ஏகாதிபத்தியத்தினிடையில் ஊழியர்களாக அமர்ந்தனர் ராஜபுத்திர வீரரில் பலர். மணிமுடிதாங்கி மண்ணாளும் மாட்சிபெற்ற மன்னர்கள் பலர், தம் மதியீனத்தால் அக்பரின் மாயவலையில் சிக்கி அன்னிய ஆதிக்கத்தைத்தாங்கிநிற்கும் தூண்களாக மாறினர். என்னே! விதிவசம்!

தாய்நாட்டின் துயர்களையச்சிறிதும் கருதாது அன்னிய அரசாங்கத்தில் அரும்பதவி வகிப்பதையே பெரும்பேறாகக்கொண்டு அகங்களிக்கும் அறிவிலிகள் எந்நாளும் தூற்றப்படுவர். ஆனால் மொகலாய கவிவாணர்கள், அக்பருடன் உறவாடிநின்று ராஜபுதனத்தை உயர் நிலையினின்று வீழ்த்திய வீணர்களைப்பற்றிக் கூறுமிடத்து "பாதுஷாவின் சிம்மாஸனத்தை அழகு படுத்திய பண்மணிக்கலன்கள்" என்று புகழ்ந்தனர்.

இது நிற்க, ராஜபுதனத்தை தலைகீழாககவிழ்த்துவிடுவதற்காக அக்பர் தான் பட்டத்திற்குவந்த சில காலத்திற்கெல்லாம செய்து முடித்திருந்த யோசனைகள் இரண்டொன்று பூர்த்திசெய்யப்பட்டு, அவனுக்குவிசேஷபலன்களைக்கொடுத்து விட்டன. ஒற்றுமையுடன் வேற்றரசருக்கு இடங்கொடாது பலகாலம் அரசுநடத்திய ரஜபுத்திர அரசர்களுக்குள் பிளவுஏற்படுத்தப்பட்டுவிட்டது. ரஜபுத்திர ஜனசமூகத்தில் அபிப்பிராயபேதமும், கக்ஷிப்பிரிவினையும் கிளைகாட்டப்பட்டன. ரத்த சம்பந்தத்தினால் ரஜபுத்திரர்கள் மொகலாய சமஸ்தானத்தின் உறவினர்களாகச் செய்யப்பட்டுவிட்டனர். நாட்டின்நல்வாழ்வும், சமாதானமும் சீர்குலைக்கப்பட்டுவிட்டது. ரஜபுத்திரர்கள் தங்கள் சுதந்தரத்தைப் பறிகொடுத்து, அன்னியருக்கு ஆட்பட்டனர் வீரபுருஷர்களின் மரபில் உதித்த வேந்தர்கள் பலர் தங்கள் அறிவீனத்தால்கட்டுண்டுநின்றனர். அன்னியனுடைய கெட்டியான சங்கிலிகளால அவர்கள் நன்குபிணைக்கப்பட்டனர். ஆனால் அந்த உண்மையை அவர்கள் உணராதபடி, மகாதந்திரசாலியும் வஞ்சகசிரோமணியுமாகிய அக்பர் தன்னுடைய தந்திரத்தினால் அந்தச் சங்கிலிகளுக்கு தங்கத்தினால் முலாம்கொடுத்து அவர்களை மயக்கிவிட்டனன்.

அக்பரின் தந்திரத்தினால் பிரயோகிக்கப்பட்ட கொடிய விஷமருந்தினால், ராஜபுதன நன்னாடென்னும் [illegible]பதரு, அழகிழந்து பூவுதிர்ந்து வாடிநின்றது. ஷேக்ஸ்பியர் என்னும் ஆங்கிலநாடகாசிரியர்எழுதிய 'பெரும்புயல்' (The Tempest) என்றநாடகத்தில், ஏரியல் (Aerial) என்ற பூதத்தினால் உண்டுபண்ணப்பட்ட பெருங்காற்றினால், கடலிலுள்ள நெப்பிள்ஸ் (Naples) அரசகுமாரனால் கப்பல் எப்படி அல்லோல கல்லோலமடைந்ததோ அதைப்போலவே, மானிட உருவங்கொண்டஅக்பர் என்னும் பேராசைப்பேயினால் சிருஷ்டிக்கப்பட்ட பெரும்புயலின் வாய்ப்பட்டு ராஜபுதனம் என்னும் அழகிய கப்பல், அளவற்ற துன்பங்களை அனுபவிக்கவேண்டிவந்தது.

ஆம்பர், மாருவாரம், பிகானீர், பூண்டி முதலியநாடுகள் தங்கள்சுயமதிப்பை இழந்துவிட்டதனாலும், ராஜபுத்திர அரசர்கள் பலர் அக்பருடன் உறவாடிநின்று தாய்நாட்டை மதியாது நின்றதனாலும்மீவாரத்துக்கும், அதன் தலைவனாய்ப் பட்டமேறிய பிரதாபனுக்கும் செப்புதற்கரிய பலஹீனமும், கஷ்டமும் ஏற்பட்டது. இத்துடன்போதாமல் இன்னும் பல கஷ்டங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் மீவாரநாட்டிலேயே ஏற்பட்டு, பிரதாபனை பயமுறுத்திநின்றன. அவற்றை வரப்போகும் அத்தியாயத்தில் கவனிப்போம்.

(தொடரும்)



# பண்டைத் தமிழரின் மேம்பாடு.

[ஸ்ரீமான் ஊ சா. வேங்கடராம ஐயர் எழுதியது.]

இங்ஙனமே, இறையனார் களவியலுரையிலே கண்ட சங்க வரலாற்றுக் குறிப்பும் பொருத்திக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. களவியலிலே தலை, இடை, கடை என்ற சங்கங்கள் முறையே நிலைத்திருந்தனவாகக் கூறப்படும் யாண்டுகளின் முன்னர் 'முன்' 'முன்' 'முன்' என்ற சொல்லைப்பெய்து கொண்டு படித்தால் பொருள் இனிது விளங்கிவிடும். இஃது இக் கட்டுரையாளர் தமது ஆசிரியர்பால் அறிந்து கொண்டபடி எழுதுவதாகும். அங்ஙனம் சேர்த்துப்படிக்கத் தமிழ்ச்சங்கத்தின் ஆதிக்காலம் இன்றைக்குச் சற்றேறக்குறைய ஐயாயிரத்து முந்நூறு என்பது அறியப்படும். இதற்குத் துணை செய்வது களவியலுரையிலே பயின்றுவரும் மேற்கோட்பாக்களும், அவற்றால் அறியப்படும் போர்க்குறிப்புகளும் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டிலே நிகழ்ந்த வரலாறுகள் என்று ஆராய்ச்சியாளர் முடிவு கட்டியிருப்பதே. இம்முறையிலே பார்க்க முடிநாகராயர் பாரத காலத்தவர் என்பதுந் தவறாகாது. இவ்வாறு ஒரு சொல்லைச் சேர்த்துப்பொருள் கொள்வது மறுத்துரைக்கப்படினும் காலக்குறிப்புத் தவறுபட்டதாகாது என்பது பல பிற்காலத்துச் சான்றோர்களின் கருத்தாகும். இவற்றால் நமது தண்டமிழ் நாடு படைப்புக்காலந்தொட்டுச் சிறப்புற்று வருவதொன்றாயினும் இக்கால ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்கும், முறைக்கும் ஒப்பச் சற்றேறக் குறைய ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலந்தொடங்கியே மிக மேம்பட்ட நிலைமையில் இருந்து வருகின்றது என்பதை அறிய இடமேற்படுகின்றது. இக்கூறியவற்றால் நமது கட்டுரையிலே பயின்று வரும் பண்டு என்பது இன்றைக்கு ஐயாயிரத்தின் முற்பட்ட காலந்தொடங்கி ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தை என்பது போதரும்.

## தமிழராவார் யாவர்?

வடக்கிலே வேங்கடமலை, தெற்கிலே குமரிக்கோடு, மேற்கும் கிழக்கும் கடல் ஆகிய நான்கெல்லைக் குட்பட்டது தமிழ்நாடு. உலகப்படைப்பிலே முதன் முதலாகத் தோன்றியது தமிழ்நாடே என்பதும்; கடல் மலையாகவும், மலை கடலாகவு மாறிய பல காட்சிகளைக் கண்டது என்பதும் பல ஆராய்ச்சியாளர்களது கருத்தாகும். நமது நாட்டினரால் மிக மேலாகக் கொண்டாடப் பட்டவையும், காலங் கண்டவையும் ஆகிய ஸ்ரீமத் இராமாயணம், மஹாபாரதம் போன்ற புராதன கிரந்தங்களால் சிறப்பித்துக் கூறப்பட்ட பழமையான சிறப்பினை யுடையது. படைப்புக்காலந் தொடங்கி மேற்பட்டு வருகின்ற பல குடிமக்களை யுடையது. "அங்குச்சென்று எப்படிப் பழகுவேன்? அவர்கள் பேசும்மொழியை அறியாமல்" என்று அகத்திய முனிவரையும் கவலை கொண்டு ஆண்டவனை வேண்டிக்கொள்ளுமாறு செய்த மிக மிகப் பழமையான பாஷையினை யுடையது. அந்த மொழியே 'அனைத்துலகும் இன்புற எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கு' என்ற சிறப்பினைப் பெற்ற தமிழ் மொழியாவது. 'உலகத்துத் தோன்றிய மக்கட் பரப்பினர் வேறு வேறு காரணம்பற்றிப் பல திறத்தினராக அழைக்கப்பட்டாலும் அவற்றுள்ளும் சிறந்தது மொழிபற்றி அழைக்கப்படுவதே' என்பதற்கிணங்கத் தாய் மொழியாகிய தமிழைப்பற்றிச் சிறப்புப் பெயரினை யுடையவர் இந்த நாட்டினரே. மதம், சீதோஷ்ண நிலைமை முதலிய காரணம்பற்றி அழைக்கப்படும் பெயர் விசேஷ ஒற்றுமையை அளிக்கக்கூடியது அன்று என்பதும் ஈண்டுக் கவனிக்கத்தக்கதாம். இதனால் மிகப் புராதன காலத்தே தோன்றி நிலைத்து வருகின்ற தண்டமிழ் நாட்டிலே பிறந்தோ, புகுந்தோ தங்கி அங்கே பயின்றுவரும் சீரிய மொழியாம் தமிழ் மொழியைத் தமக்குரிய தாய்மொழியாகக் கொண்டார் அனைவரும் தமிழராவார் என்பது அறியப்படும்.

### மேம்பாடு.

இனி, அடுத்து ஆராயவேண்டியது பண்டைத் தமிழரின் மேம்பாடுகளையே. அந்த மேம்பாடு பல திறப்பட்டு அறியப்படும் என்பது முன்னர்க் கூறப்பட்டது. அம்முறையிலே ஒவ்வொரு துறையிலும் எங்ஙனம் தமிழராவார் மேம்பட்டிருந்தனர் என்பதை அறிவதால் இக்கட்டுரை பூர்த்தியானதாகும். அனைத்து மேம்பாடுகளுக்கும் தாயகமான 'கல்வி' தொடங்கி ஒவ்வொன்றாகப் பண்டைத் தண்டமிழ் நூல்களின் சான்றுகளைக்கொண்டே கூறுவதும் இக்கட்டுரைக்குப் பொருந்தியதாம்.

### கல்வி.

மக்களாவார்க்குக் கல்வியே கண்போன்றது; உயிர்போன்றது; மக்கட்டன்மையை அளிப்பது; துன்பத்தையும், பழிச் சொல்லையும் போக்குவது; இன்பத்தையும், புகழையும் கொடுப்பது. கல்லாதவனை அவனைப் பெற்றதாயும் மதிக்கமாட்டாள். ஒரே தாயின் வயிற்றிலே பிறந்திருப்பினும் அவருள் படிக்காத மூத்தோனை அரசன் அழைக்கமாட்டான்; சிறப்புக்களைச் செய்யமாட்டான். ஆனால், அவர்களுட் படித்த, வயதிலே சிறியவனையே அரசன் அழைத்துப் பேசுவான்; பலவகைச் சிறப்புக்களையும் செய்வான்; அவனோடு ஆலோசனைகளைச் செய்து அவனது சொல்லின் வழியே நடப்பான். மேற்குலத்துப் பிறந்தும் கல்லாதவன் கற்றவல்ல கீழ்க்குலத்தானை வழிபடுவான். கற்றவர்க்கு எல்லா ஊரும் சொந்த ஊராகவே அமையும். எல்லாரும் சொந்தக்காரரே யாவர். கல்லாதவர்க்குச் சொந்த ஊரும் பயன்படாதொழியும்; சுற்றத்தாரும் வெறுத் தொதுக்குவர். கல்வியே கருந்தனம்; கல்வியே எல்லாம். ஆகலின், மக்களாவார்க்கு வேண்டிய அனைத்தையும் ஈய வல்ல உற்ற துணையாகிய கல்வியைத் தக்க ஆசிரியரை அடுத்துச் சிறிதுங் குறைபாடின்றி வழிபட்டு உத்தம மாணாக்கர்களுக்குரிய இலக்கணங்களிற் குறைபடாதொழுகிக் கற்றல் வேண்டும். பல ஆண்டுகள் பிரமசரியங்காத்துக் கற்றல் வேண்டும். மணற்கேணியிலே நீர் சுரப்பதுபோல் நயம்தோன்றுமாதலின் பல முறையும் கற்றல் வேண்டும். சாமளவுங் கற்றல்வேண்டும். கல்விக்கு நிகராவது கல்வியே.

### அறிவு.

கல்வித்துறையிலே பெரிதும் மேம்பட்டிருந்த தமிழர் அறிவுடைமையிலும் தலை சிறந்து விளங்கினர். அறிவுடையவரே அனைத்தையும் பெற்றவர். அறிவற்றவர் எதனையும் பெற்றிராதவர். அறிவுடைமையே செல்வம்; அறிவின்மையே வறுமை. அரசரையும் திருத்தி நல்வழிப்படுத்தும் ஆற்றல் அறிவுடைமைக்குண்டு. ஒரு புலவர் அதிக வரிவிதித்து உழவர்களுக்குத் துன்பத்தைக்கொடுத்த அரசினிடம் தமது அறிவுடைமையால்வாதாடினர்; குடிகளுக்கு உண்டான பளுவைக் குறைத்தார்; அரசனை மகிழ்வித்தார்; அவனாலும் கொண்டாடப்பட்டார். ஒரு புலவர் இரண்டு சகோதர அரசர்கள் போர்புரிந்து துன்புறுவதையும், குடிகள் வருந்துவதையும் கண்டு மனம் வருந்தி இடையில் நின்று தடுத்து அவர்களைப் போர்புரிவதினின்றும் விலக்கினர். ஒரு புலவர் தமது அரசன் வேற்றரசனால் பிணிப்புண்டு சிறைப்பட்டமையை அறிந்து சமயோசிதமாக நடந்து அந்த அரசனைச் சிறைமீட்டனர். ஒரு புலவர் தமது நட்பினனான அரசன் பகையரசர்களால் முற்றுகை இடர்ப்பட்டு வருந்தி உள்ளே அடைபட்டுக் கிடக்குங்கால் கிளிகளைப்பழக்கி வெளியே அனுப்பி அங்கிருந்து தானிய மணிகளைக் கொணர்வித்துத் தமது அரசனையும் அவனுடைய குடி மக்களையும் உண்டு உயிர் வாழும்படி செய்தார். ஒரு புலவர் வேற்றிடத்திலிருந்த, முன் கண்டிராத நட்புரிமை பூண்ட ஓர் அரசன் வடக்கிருந்து உயிர் நீக்க விரும்புவதை உணர்ந்து தாமும் சென்று அவனுடன் வடக்கிருந்தனர் ஒரு புலவர் தம்பியின் கையினின்றும் தப்பி உயிர் வாழ்ந்து ஒற்றமையோடிருக்குமாறு தமயனது தலையைக் காத்தனர். ஒரு புலவர் கற்புடை மனைவியை மறந்து வேறு துறைகளில் மகிழ்ந்து வந்த அரசனைப் பற்பல நியாயங்களைக் காட்டி வற்புறுத்தி அக்கற்புடை மனைவியை மகிழ்விக்குமாறு செய்தனர், இங்ஙனமே அறிவு சான்ற பல பெரியோர்களால் செய்யப்பட்ட பல வரலாறுகள் உண்டு. அவை அனைத்தும் பண்டைத் தமிழர்களின் அறிவு மேம்பாட்டைத் தெரிவிப்பன என்பது தவறாகாது. இவ்வுலக வாழ்க்கைக்கு இன்பம் பயக்கும் துறையில் மாத்திரமன்றி மறுமைக்கும் இன்பந்தரும் அறிவுடைமையிலும் தலை சிறந்திருந்தனர். அது பின்னர்க் கூறப்பெறும். இவை அனைத்தும் அறிவுடைமையின் பெருமையால் நிகழ்ந்தனவே. அறிவே இன்பம் (தொடரும்)



# இடும்பாவனம் பிர்மோத்ஸவம்.

இந்த க்ஷேத்திரமானது பாண்டி ரயில்வே ஸ்டேஷனுக்கு 4 மைல் தூரத்திலுள்ளது. பாரதத்தில் சொல்லப்படுகிற இடும்பாவனம் இதுதான். காசியின் விசேஷத்தில் 16ல் ஒரு பங்கு உள்ளது. மணி முத்தா நதியும் அதன் கரையில் ருத்திர பூமியும் ஏற்பட்டிருக்கிறது. ஜீவன் முக்தி க்ஷேத்திரம். இந்த ஊரில் ஆக்மரவிலகுகிற சகல ஜீவன்களுக்கும் வலது பாரிசத்திலேயே சுவாசம் நீங்குகிறது என்று சொல்லப்படுகிறது சன்னதியில் சிதபுஷ்கரணி என்ற தீர்த்தம் இருக்கிறது. அதில் 108 இதழ்களுக்கு மேலுள்ள செந்தாமரை புஷ்பம் நிறைந்திருக்கிறது. ஓர் பிராமணர் அஸ்தியை கங்கையில் சேர்ப்பதற்காக காசிக்கு எடுத்துக் கொண்டுபோகும் வழியில் இக்குளக்கரையில் இரக்க செந்தாமரைப் புஷ்பமாக இருக்கக்கண்டு, மறுபடியும் எடுத்துக்கொண்டு சிறிது தூரம்போய் பார்க்க அஸ்தியாகவே யிருந்தபடியால் திரும்பவும் இக்குளக்கரைக்கு வந்து பார்க்க செந்தாமரையாக விளங்கியதைக்கொண்டு இக்குளத்திலேயே வைத்துச்சென்றனராம். பார்வதி, பரமேஸ்வரன் திருக்கல்யாண கோலத்துடன் அகஸ்தியருக்கு தரிசனம் கொடுத்த க்ஷேத்திரம் மகாலிங்கத்துக்கு பின்னால் சிலாவிக்கிரகத்தில் பார்வதி பரமேஸ்வரன் திருக்கல்யாண கோலத்துடன் விளங்குகிறார்.

திருஞான சம்மந்தமூர்த்தி சுவாமிகள் குன்னூரிலிருந்து இந்த க்ஷேத்திரத்திற்கு வருகையில் பூமியைப் பார்க்கும்கால் மணல் முழுவதும் சிவலிங்கங்களாக தென்பட பூமியில் அடிவைக்காமல் குன்னூரிலிருந்தபடியே இந்த க்ஷேத்திரத்தை பாடிவிட்டுச்சென்றனராம், இந்த க்ஷேத்திரத்தின் திருப்பணியை பரம்பரை டிரஸ்டியாக இருந்துவரும் குன்னியூர் ஸ்ரீமான் K. S. சிவசுப்பிறமணியய்யர் அவர்களின் மூன்னோர்களால் சுமார் 3½ லக்ஷரூபாய் வரையில் செலவுசெய்து மிகவும் அழகாகவும் சாஸ்திரோக்தமாகவும் திருப்பணி செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடந்திருக்கிறது.

ஸ்தலபுராணம் தமிழ் வித்வான் பின்னத்தூர் பிர்மஸ்ரீ அ. நாராயணசாமி அய்யரால் இயற்றப்பட்டு ஷெடியார் தம்பி ஸ்ரீமான் P. A. சுப்பிறமணி[illegible]ரால் பிரசுரம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு[illegible]றது.

ஸ்ரீமான் ஐயர் அவர்கள் குடும்பத்தார் காடாக இருந்த இடத்தை தென்னஞ்சோலையாக செய்து கோவிலுக்கு ஏராளமான வரும்படியை உண்டு பண்ணிவிட்டார்கள். இந்த க்ஷேத்திரத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீமங்கள நாயகி ஸமேத ஸ்ரீஸத்குணநாதேஸ்வர சுவாமிக்கு நாளது வைகாசியீ 8உ துடங்கி 22உ முடிய பிர்மோத்ஸவமானது டிரஸ்டி ஸ்ரீமான் K. S. சிவசுப்பிரமணியய்யர் அவர்களால் எவ்வருஷத்தைக் காட்டிலும் இவ்வருஷம் மிகவும் சிறப்பாக நடத்தி வைக்கப்பட்டது. புஷ்பப்பல்லக்கும், ரிஷபவாகன காக்ஷியும் மேன்மையுற்று விளங்கின. திருவாரூரைப்போல் தேரானது 16 பட்டைகளாக அலங்கரிக்கப்பட்டு வழக்கப்படி மாகாணத்தார்களின் முயற்சியால் நிலைவந்து சேர்ந்தது. உற்சவம் ஆரம்பமுதல் கடைசி வரையில் வேதகோஷ்டிகளின் கானமும் தமிழ்வேத பாராயணமும் நடந்துவந்தன. சங்கீதக்கச்சேரிக்கும் குறைவில்லை. பிராமணர்களுக்கு தனியாகவும் மற்றவர்களுக்கு தனியாகவும் போஜன வசதிகள் செய்யப்பட்டு அறுசுவையுடனும் அன்பான உபசரிப்புடனும் அன்னமளிக்கப்பட்டன. ஸ்ரீமான்கள்மானேஜர் சுப்பிறமணியய்யர் சுப்பாராயர் முதலியவர்களும் பண்ணை காரியஸ்தர்களும் விசேஷ சிரத்தை எடுத்துக்கொண்டு யாதொரு குறைவுமின்றி நிறைவேற்றினார்கள். முத்துப்பேட்டை சப் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் R. மதுரநாயகம் பிள்ளை உற்சவ முடிவுவரையில் இருந்து யாதொரு புகாருக்கிடமில்லாதபடி பந்தோபஸ்து செய்ததும் தேரோட்டுவதில் அதிகசிரத்தை எடுத்துக்கொண்டதும் பாராட்டத்தக்கது. குன்னியூர் ஸ்ரீமான் D. நாராயணஸாமி ஐயர், மருதாந்தநல்லூர் ஸ்ரீமான் R. சூரிய நாராயணமூர்த்தி ஐயர், ஸ்ரீமான் M. ராமமூர்த்தி ஐயர், ஸ்ரீமான் K. K. சுந்தரமய்யர், ஸ்ரீமான் சின்னசாமி ஐயர், கொத்தமங்கலம் ஸ்ரீமான் சாம்பசிவய்யர், சிதக்கமங்கலம் ஸ்ரீமான் நடேச ஜோஸியர் முதலியவர்களும் விஜயஞ்செய்து உற்சவத்தை சிறப்பித்தார்கள். தர்மமே பெரிதென மதித்து இவ்வுற்சவத்தை மிகச்சிறப்பாக நடத்திவைத்த ஸ்ரீமான் K. S சிவசுப்பிறமணியய்யர் அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்தாருக்கும் தீர்க்காயுளையும் சகல சம்பத்தையும் பெரும்புகழையும் ஸ்ரீசத்குணநாதர் அளிப்பாராக.

# அன்னதானபலன்.

கலிங்கதேசத்திலே ஒரு கிராமத்தில் ஒரு பிராமணன் உபாதானமெடுத்து ஜீவனஞ்செய்து வந்தான். சுவாமியின் அனுக்கிரகத்தால் அவனுக்கு ஓர் புத்திரன் பிறந்தான் அந்த புத்திரனுக்கு தாய் தந்தையர் தங்கள் சக்தியானுசாரம் வேத விதிப்படி பிராமண சடங்குகளை நிறைவேற்றி ஐந்து வயதானதும் பள்ளியில் வைத்தார்கள். அப்புத்திரன் நாலு வேதம் ஆறு சாஸ்திரம் அறுபத்தி நான்கு கலைக்கியானம் மனுவிக்கியானம் முதலியவற்றை ஓதி உணர்ந்தவுடன் வயது பதினொன்றாயிற்று. அக்காலத்தில் பிதா இறந்துவிட்டார். பிதாவுக்குச் செய்யவேண்டிய கருமங்களை நிறைவேற்றிவிட்டு தானும் மாதாவுமாக வீட்டிலிருந்தான். மாதா கூலிக்கு குத்தி அதில் கிடைத்த அமுதுபடியைக்கொண்டு சமையல் செய்து பிராமணருக்கு அன்னமளித்துவிட்டு மீதியை தானும் தன்புத்திரனுமாக புசித்து காலத்தைக் கழித்து வந்தாள். ஒருநாள் புத்திரன் அன்னை கொண்டிருக்கிற விருதத்தைப்பற்றி யோசித்துப் பார்த்து ஒன்றும் தோன்றாதவனாய் தாயிடத்து வணங்கி, ஓ அம்மணி! நமது ஸ்திதியோ கூலிக்குக் குத்தி அதில் வரும் அமுதுபடியல்லாது வேறு ஜீவனத்திற்கு மார்க்கமில்லாமலிருக்கிறது. அப்படியிருக்க தாங்கள் தினம் ஒரு பிராமணருக்கு அன்னமிடாமல் சாப்பிடுகிறதில்லை. இந்த விருதத்தினால் வரும் பயனென்ன? என்று வினவ, தாயாரும் சிரிப்புற்று, அப்பா! குழந்தாய், பெரியோர்களால் கூறப்பட்டிருக்கிற சோடச தானங்களிற் சிறந்தது அன்னதானமும், நிதானமும், என்று சொல்லுவார்கள். அதில், அன்னதானம் எல்லாவற்றிலும் மேலானது என்று என்னுடைய முன்னோர்களால் சொல்லக்கேட்டிருக்கிறேன் ஆகையால் நான் அன்னமிடுவதை ஒரு விரதமாகக் கொண்டிருக்கிறேன் என்று கூற புத்திரன் வணங்கி, ஓ அம்மணி! அந்த அன்னதானத்தின் பலனென்ன? அதனை விளங்கஉரைக்கவேண்டுமென்று வினவ, தாய் சொல்லுகின்றாள். அப்பா! நான் மூதாதை சொன்னதைக் கேட்டேனேயன்றி அன்னதானத்தின் பலன் என்னவென்று கேட்டதுமில்லை அன்னவர்கள் சொல்லவுமில்லை. மேலும் அன்னதானத்தின் பலன் சாஸ்திரங்களால் கூறத்தக்கது. இவ்வுலகத்துக்கு காரணராகிய பரமனுக்கே தெரியுமாதலால் அவரை தரிசித்து கேட்டால் விளங்குமென்று கூற புத்திரன்கேட்டு தாயை வணங்கி, ஓ அம்மணி! நான் பரமசிவத்தைக்கண்டு அன்னதானத்தின் பலனை கேட்டுவருகிறேன் என்று தாயை வணங்கி விடைபெற்றுக்கொண்டு அக்ரகாரத்தைக்கடந்து காட்டைவிட்டுகாட்டிற்புகுந்து அநேக தூரஞ் சென்றான். அக்காடோ மனிதசஞ்சாரமில்லாதது கரடி, புலி, யானைகள் நிறைந்திருக்கிற அவ்வனத்தில்நெடுந்தூரம் சென்றான் அஸ்தமிக்கிறவேளையாயிற்று. அக்காட்டிலிருக்கிற வேடன் ஒருவன் கண்டு ஓ ஓ! யாரோ ஒரு மனிதன் செல்லுகிறான் அவனைப்பார்த்தால் சிறுவனாகவும் பிராமணத்திருமேனியாகவும் காண்கிறது, இன்னும் சிறிது தூரம் சென்றானாகில் பொழுதஸ்தமனமாகிவிடும். காடோ பெருங்காடு, மிருகதொந்தரையதிகம். இன்றிராப்பொழுது சிறுவனை நம்மிடத்தில் வைத்திருந்தால் சூரியோதயமானவுடன் நடக்கட்டுமென்று கருதி பையனை வழிமறித்து தன்கருத்தையுரைத்து அழைத்துப்போய் தன்பரணின்மேல்வைத்துக்கொண்டான் பிறகு மனைவியை யழைத்து அடி பெண்ணே! இவனோ பிராமணர் பொழுதஸ்தமிக்கிறவேளை தன்னந்தனியே காட்டில் செல்லுகிறது தகுதியல்லவென்று நினைத்து இன்றிராப்பொழுதுக்கு இங்கேவைத்திருக்கவேண்டுமென்று கருதியழைத்துவந்தேன் நாமிருவரும் பொசிக்கும் தினைமாவில் கொஞ்சம் நெருக்கி கொடுத்தால் அவர் பசியாறிப்போகும். நீ படுக்கிற இடத்திலும் நான்படுக்கிற இடத்திலும் சிறிது இடம் பங்கிட்டுக் கொடுப்போமாகில் அதில் படுத்திருப்பாரென்று கூற, வேடன் மனைவி கடுஞ்சினமடைந்து, இடமுங்கொடேன் என்பங்கு தேனையும் தினைமாவையும் கொடேன் என்றாள். வேடன்பார்த்து அவ்வேதியனுக்கு தன்பங்குஇடத்தில் கொஞ்சமிடமும், தன் பங்கு தேனிலும் தினைமாவிலும் கொஞ்சம் கொடுத்து புசிக்கச்செய்து தன்பக்கத்தில் படுக்க வைத்துக்கொண்டு தானும் படுத்துக்கொண்டான்

தொடரும்.



# திருப்பனந்தாள் ஆதீனம்.

## மூன்று விசேஷ தர்மங்கள்.

**ஆழ்ந்தயோஜனை! சிறந்த கோள்கை!! தகுந்த ஏற்பாடு!!!**

1. திருப்பனந்தாளிலுள்ள ஸ்ரீ காசிமடத்து ஆதீன கர்த்தரவர்கள் சிற்சில தர்ம கைங்கர்யங்களைச் செய்ய விருப்பங்கொண்டு அவைகளைச் சாசுவத நிலையில் நடத்துவிக்க முன்வந்திருக்கிறார்கள்.

2. அவ்விஷயத்திற்காக வேண்டி தஞ்சாவூர் ஜில்லா மன்னார்குடி தாலூகாவிலிருக்கும் நஞ்சையும் புஞ்சையும் சேர்ந்த ஏறக்குறைய 1000 ஏகர் நிலம் தனித்தெடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. அந்த சொத்திலிருந்து வருஷாவாரியில் 25000 ரூபாய்க்குமேல் 30,000 ரூபாய்க்குள்ளாக இப்போது வருமானம் உண்டு. மடத்திற்குச்சொந்தமான சொத்துக்களின் வருவாயிலிருந்து ஆதீனகர்த்தரால் மேற்சொன்ன பூஸ்திதியானது வாங்கப்பட்டதாகும். ஆதலின் அது முழுவதும் இப்போதுள்ள ஆதீனகர்த்தருக்குத்தான் சொந்தம். இங்ஙனம் தனித்தெடுத்து வைக்கப்பட்டிருக்கும் மேற் குறித்த சொத்தின் வருவாயிலிருந்து வருஷமொன்றுக்குத் தர்ம கைங்கர்யங்களுக்காக 15,000 ரூபா செலவிடுவதென்று தீர்மானித்திருக்கிறார்கள். அந்த சொத்துகளெல்லாம் மடத்து ஆதீனகர்த்தர்களிடமே யிருந்து வகிக்கப்படும். அப்படி நிர்வகிப்பதில் பிரதி வருஷத்திலும் தர்ம காரியங்களையொட்டி 15,000 ரூபா மாத்திரம் தனித்தெடுத்து வைக்கப்படுவதென்றுளனில்,

1. அவ்விதம் தனித்தெடுத்து வைக்குந்தொகை எக்காலத்திலும் சுமையாயிருப்பதாக ஏற்படாது.

2. தொகை செலுத்தப்பட்ட பிறகு போதிய பணம் கையிருப்பில் இருக்கும்.

3. சரியான மகசூல் இல்லாத வருடங்களில் கூட வருவாய் குறைந்து போனாலும் குறிப்பிட்ட தொகையைக் கொடுக்கும்படியான வசதியிருக்கும்.

4. சந்திர சூரியர்கள் உள்ள பரியந்தம் சாசுவதமாகவும் தொடர்ச்சியாகவும் தர்மத்தை நடத்துவிக்க வேண்டும்.

(a) திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடமானது திராவிடக் கல்விக்கான நிலயங்களுள் ஒன்று.

(b) காசி க்ஷேத்திரத்திற்கும் ராமேசுவரக்ஷேத்திரத்திற்கும் செல்லும் யாத்திரிகர்களுக்குப் போதிய சௌகர்யங்கள் செய்து கொடுப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்ட ஸ்தாபனமாகும்.

(c) தென்னிந்தியாவிலுள்ள முக்கியமான சைவ ஸ்தாபனங்களில் இதுவுமொன்று.

1. மடாலயத்தார் கொண்டிருக்கும் நோக்கங்களுக்கு அனுகுணமாக மகா ஜனங்களின் வெகு காலத்தேவைகள் சிலவற்றை நிறைவேற்றும் உத்தேசத்துடன் இத்தருமங்கள் மூன்று வகைகளாகத் தொகுக்கப்பட்டிருக்கின்றன. மடாலய அபிவிருத்தியைக் கோருவோர் சிலருடன் கலந்து தீர்க்காலோசனை பண்ணிய பிறகே அடியிற் கண்ட நோக்கங்களோடு தர்மங்கள் இருக்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்படலாயிற்று.

5. நோக்கங்களாவன:—

(a) எல்லோர்க்கும் எளிதிற் கிட்டிப் பயன்படும் வகையாகத் தமிழ் தெலுங்கு முதலான பாஷைகளில் நூல்களை வெளியிடுவதனால் உள்ளபடி உபயோகமாகும் கல்வியைப் பரப்ப ஏற்பாடு செய்வது.

(b) காசிக்கும் இராமேசுவரத்திற்கும் பிரயாணம் போகும் யாத்திரிகர்கள் சௌகர்யமாகத் தங்கியிருக்கும்படியாக அனுகூலமான விடங்களில் சத்திரங்கள் கட்டுவிப்பது;

(c) அவசியமான இடங்களிலெல்லாம் பிராசீன சிவாலயங்களைப் புதுப்பிப்பதோடு அவ்வாலயங்களில் திருப்திகரமாகப் பூஜைகள் நடைபெறும்படியான ஐவேஜி வைத்து ஏற்பாடு செய்வது.

6. மேலே சொன்ன மூன்று லட்சியங்களும் நிறைவேறுவதற்காக வேண்டி மூன்று வருஷங்களுக்கொருமுறை ஒவ்வொன்றுக்கும் 15,000 ரூபா தனித்தெடுத்தளிக்கப்படும்.

7. முதலாவது, கல்வியைப் பரப்புவதற்கான ஏற்பாடு; இதற்காக அடியிற்கண்ட பிரேரபணைகள் முன்னிடப்பட்டிருக்கின்றன:—

இந்த ராஜதானியில் ஏறக்குறைய மூப்பது லக்ஷம் ஜனங்களுக்குக் குறையாமல் பேசப்படும் தமிழ், தெலுங்கு மற்றுமுள்ள இதர பாஷைகளில் மொழி பெயர்த்து நூல்களை வெளியிடுவதற்காக மதராஸ் யூனிவர்ஸிடியாரிடம் மூன்று வருஷங்களுக்கொருமுறை 15,000 ரூபாகொடுக்கப்படும். பின்னும் இந்த லக்ஷியம் நிறைவேறுவதற்கு அவசியமான காரியங்களைச் செய்வதோடு அவர்கள் மேற்குறித்த பாஷைகளில் புதிய கிரந்தங்களும் எழுதுவிக்க வேண்டும்.

விவசாயம், ஆரோக்கியானுகூலம் ஆகிய இப்படிப்பட்ட தினசரி தேவையானும் விஷயங்களில் அனுபவ ரீதியாக பள்ளிக்கூடங்களிலிருந்து வெளியேறும் வித்தியார்த்திகளுக்கு பரிச்சயம் இருக்கவேண்டுவது மிகவும் அவசியம். உபயோகமுள்ள சற்பிரஜைகளாயிருக்கும்படி அவ்வித்தியார்த்திகளைப் பழக்கவேண்டும். தம்மையாதரித்துக் கொள்ளும் வகையில் சம்பாத்தியம் பெறும்படியானவர்களாகவும் இருக்கவேண்டும். புத்தகங்களைத் தெரிந்தெடுப்பதோ, அவைகளை மொழி பெயர்ப்பதோ, பிரசுரிப்பதோ அல்லது விற்பதோ எல்லாம் சர்வகலாசங்கத்தாரைச்சார்ந்தது. வேண்டுமாயின், சலீஸான விலைக்கு நூல்களை விற்கலாம். அவசியமேற்படும் பட்சத்தில் எளியோர்க்கு புஸ்தகங்களை இலவசமாகவுங் கொடுக்கலாம்.

8. இரண்டாவது, யாத்திரிகர்களுக்கான சௌகர்யங்கள்:— காசிக்கும் இராமேசுவரத்திற்கும் செல்லும் பற்பல ரயில்வே லயன்களை யொட்டி சத்திரங்கள் கட்டுவதாக இந்தியாவிலுள்ள ஸெண்ட்ரல் ரெயில்வே போர்ட்டாரிடம் மூன்று வருஷங்களுக்கொரு முறை 15,000 ரூ. கொடுக்கப்படும். இந்த சத்திரங்கள் 200 மைல் தூரத்திற்கொன்றாகவும் கூடுமானவரையில் ரெயில்வே ஸ்டேஷனுக்கருகாமையிலும் நிருமாணிக்கப்படவேண்டும். சில விசேஷப்பட ஒவ்வொரு சத்திரமும் கட்டப்படவேண்டுமாதலால் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு கிணறு இருந்தேயாகவேண்டும். ஆதீன கர்த்தராவது அவரைச் சேர்ந்தவர்களாவது அச்சத்திரங்களில் தங்க நேருங்காலங்களில் அவர் தம் உபயோகத்திற்காக ஒவ்வொரு சத்திரத்திலும் இரண்டு அறைகள் தனியாக இருக்கவேண்டும்.

மேற்குறிப்பிட்ட 7-வது பாராவிற் கண்டபடி சர்வகலா சங்கத்தார் பிரசுரித்து வெளியிட்ட புஸ்தகங்கள் அடங்கிய லைப்ரரியொன்று ஒவ்வொரு சத்திரத்திலும் இருக்கவேண்டும். அதோடுகூட மடாலய ஸ்தாபகரான ஸ்ரீ நமசிவாய குரு சுவாமிகளின் சிலா விக்கிரஹமொன்றை சத்திரத்தில் பார்வையான விடத்திலே வைக்கவேண்டும். மேலே சொன்ன பிரகாரம் 200 மைல் தூரத்திற்கொரு சத்திரமாகக்கட்டி முடித்த பிறகு யாக்கத்திலுள்ள விசேஷ ஸ்தலங்களிலும் ஆற்றங்கரைகளிலும் சத்திரங் கட்டப்படவேண்டுமென்பதைப் பற்றிய விவரப்பட்டி பிறகு அறிவிக்கப்படும். சத்திர நிருவாகம் நடைபெறுவதற்காக அங்கு தங்குவோரிடமிருந்து சொற்ப வாடகை வாங்குவதில் தோஷமில்லை.

9. மூன்றாவது சிவாலயத் திருப்பணிவேலை இவ்விஷயமாக இப்போதுள்ள சிற்சில ஆலயங்களுக்கு [இதன் ஜாபிதா தனியாயுளது] முறையே 15,000 ரூபா பெறுமான பூஸ்திதி வாங்கி யளிக்கப்படும். கோவிலில் நடக்கவேண்டிய சாதாரண பூஜைக்கு இத்தொகை போதுமானது. கோயில் இருக்கும் கிராமத்திலோ அல்லது அதற்கருகாமையிலோ 15,000 ரூபாய்க்கு நிலங்கள் வாங்கினால் வருஷ வாரியிற் கிடைக்கக்கூடிய வருமானம் ஏறக்குறைய 1000 ரூபாய் இதில் பனிரண்டில் ஒரு பகுதியை யெடுத்து வைத்து 12 வருஷங்களுக்கொரு முறை இந்த 12 வருஷங்களில் சேமித்து வைத்த பணத்தைக்கொண்டு கும்பாபிஷேகம் நடத்தவேண்டும். பாக்கியுள்ள பணத்தைத் தேவஸ்தானத்துப்பொது செலவுக்கு உபயோகிக்கலாம். மேற் சொன்ன பிரகாரம் எல்லாக் கோயில்களுக்கும் நிலம் வாங்கி ஐவேஜி ஏற்படுத்திய பிறகு பழைய கோவில்களைப் புதுப்பிக்கவோ புதிய கோவில்கள் கட்டவோ செய்யவேண்டும். (இதற்கும் ஜாப்தா உளது) இப்படிச் செய்வதில் பெரிய கோபுரங்களைப் பொறுத்த மட்டில் பணம் செலவிட வேண்டியதில்லை. கர்ப்பக்கிருஹம், முக மண்டபம், கோயில் பிரகாரத்தில் குளம் அல்லது கிணறு ஒரு மடப்பளி ஆகிய இவைகளைக் கட்டினால் போதும். இந்த வேலைகள் கோவில் இருக்கும் ஜில்லாவின் டிக்ஷனைச் சேர்ந்த ஜில்லா கலெக்டர் அல்லது தேவஸ்தானம் கமிட்டி இவர்களுடைய மேற்பார்வையில் நடத்தப்படவேண்டும்.

10. மேற்சொன்ன தர்ம கைங்கர்யங்களுக்காக வேண்டித் தனித்தெடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஐவேஜியிலிருந்து வசூல்செய்ய அர்ஹதையுண்டு.

மேலே குறிப்பிட்ட 15,000 ரூபா 1929-ம் வருஷம் ஜூன் மீ 30௳ ஆதீன கர்த்தரால் முதன்முதலாக அளிக்கப்பட்டுப் பின்னர் ஒவ்வொரு வருஷம் ஜூன் மீ 30௳யிலும் கொடுபட்டு வரும். அப்படிக் கொடுக்கத்தவறும் பட்சத்தில் தஞ்சாவூர் ஜில்லா கலெக்டருக்கு மேற்படி தொகையை வட்டியுடன் வசூலித்து எத்தரும கைங்கர்யத்திற்கு அத்தொகை சேரவேண்டுமோ அதற்களிக்க அதிகாரமுண்டு.

11. புத்தகங்களைத் தெரிந்தெடுக்கும் விஷயத்திலும், சத்திரங்களைக் கட்டுவதற்காக நிலம் வாங்கும் விஷயத்திலும், திருப்பணி வேலையோ புதுப்பிக்கும் வேலையோ செய்யவேண்டிய ஆலயங்களைக் குறிக்கும் விஷயத்திலும் ஆதீன கர்த்தரைக் கலந்து ஆலோசிப்பது விரும்பத்தக்கது. அத்துடன் அப்போதைக்கப்போது தர்ம கைங்கர்ய முன்னேற்ற விஷயமனைத்தும் ஆதீன கர்த்தாவர்களுக்கு அறிவிப்பது விரும்புதற்குரியது.

12. உத்தேசிக்கப்பட்டிருக்கும் தர்ம கைங்கர்ய ஏற்பாடு நன்கு நிறைவேற வெகுகாலமாகலாமென்று சிலர் கருதக்கூடும். இந்த விஷயத்தைக் கூட நாம் ஆலோசியாமலில்லை. தான் நட்ட மரங்களின் பலனைத்தான் அடைய விரும்புவது லாத்தியமல்ல; மேலும் இந்த ஏற்பாடு முதன்முதல், அமுலுக்குவந்தால், தர்மசிந்தனையோடு கூடின மற்றவர்களும் மேற்சொன்ன வகையையொட்டிச் சத்திரங்கள் கட்டவும் கோயிற்றிருப்பணி புரியவும் ஊக்கங்கொண்டு முன் வருவார்களென்று நம்பலாகும். ஆனது பற்றி, பார்வைக்குப் பகீரதப் பிரயத்தனமாகத் தோன்றின போதிலும், துரிதத்திலேயே தர்ம கைங்கர்யம் சிறப்புடன் செழிக்குமென்பது எமது துணிபு.

---



# தென்னிந்தியக் கோவில்கள்.

[ஸ்ரீமான் பி. வி. ஜெகதீசய்யர், ஆர்க்கியாலாஜிகல் டிபார்ட்மெண்ட்.]

## திருப்பதி.

(82-வது பக்கம் தொடர்ச்சி.)

இவ்வாழ்வாருக்கு சுதர்சனமென்றும் ஒரு பெயருண்டு சத்துருக்களை ஜயம்பெறவேண்டி இம்மூர்த்தியை ஜனங்கள் ஏராளமாய்ப் பூஜிப்பது வழக்கம். இந்த அவசரத்திற்குத்தான் தஞ்சாவூர் ஜில்லாவில் கும்பகோண க்ஷேத்திரத்தில் சக்ரபாணி கோவிலென்று ஒரு தனிக்கோயில் கட்டுமலையின்பேரில் காவேரி தீரத்தில் இருந்தும் வருகிறது.

இவ்விடம் முக்ய மூர்த்தியாகிய சீனிவாஸப் பெருமாளுக்கு ஜனங்கள் ஏராளமாய்ப் பச்சைக் கற்பூரம் சாத்துவதற்கு ஒரு கதை உளது. ஒரு காலத்தில் ஒரு கிழப்பிராமணன் இக்கோயிலினருகில் ஒரு குளம் வெட்டுவதாகப் பிரார்த்தனை செய்து கொண்டான் அந்தப்படி செய்விக்க தனக்குபோதுமான திரவியமில்லாததினால் பூர்ண கர்ப்பிணியாகிய தனது ஸம்ஸாரத்தையே தான் வெட்டிக்கொடுக்கும் மண்ணைக் கரையேற்றச்செய்தான். இந்த ஸ்திரீ இவ்விதம் மண்ணைச்சுமந்து கஷ்டப்படுவதை நிவிர்த்திக்க வேண்டி பகவான் ஒரு பிராம்மணப்பையன் வேஷமெடுத்து அவளது பாரத்தை வாங்கிச்சென்று கொண்டிருந்தார். இதை கவனித்த கிழப்பிராம்மணன் பகவத் விஷயத்தில் தங்களுக்கு ஏற்படும் கைங்கர்ய பலனை இன்னொருவன் அடைவதைக் கண்டு வருத்தமடைந்து தனது பத்நியைத்தன் கையிலுள்ள பாறைக்கோலால் அடித்தான். உடனே சுவாமி முன்னுற்றதும் பகவான் திருமேனியில் எவ்விடத்தில் தனது பத்நியை அடித்தானோ அந்த இடத்தில் ரக்தம் எழுவதைக்கண்டு ஈஸ்வரனே இம்மாதிரி லீலைசெய்தாரென்று கண்டு தனது சிரேசத்திலுள்ள துணியால் காயத்தைக்கட்டி கர்ப்பூரம் வைத்து அதை ஆத்த மூயன்றான் அதுமுதல் இவ்விதம் இந்தப் பெருமானைத் திருப்பதிஸேவித்தால் ஜனங்களும் பகவானுக்குப் பச்சைக்கற்பூரம் சாத்தும் வழக்கத்தை அனுஷ்டித்து வருகிறார்கள்.

குறிப்பு:—“தென்னிந்தியா க்ஷேத்திரங்கள்” என்னும் 24 படங்களில் வெளியாவதாக இதின் பிரசுரிக்கப்பட்டிருக்கும் விளம்பரத்தில் கண்டபடி இவ்வூரின் விசேஷம் முழுமையும் ஏராளமான படங்களுடன் 9, 10 பாகங்களில் சீக்கிரம் வெளிவரும்.

கவனியுங்கள்! போலிச்சரக்குகளை வாங்கி ஏமாறுதீர்கள்!!

தென்னிந்தியா நெசவுசாலை,
கும்பகோணம்.

புலவிதமான உடவல்கள், ஷர்ட்டிங் பீஸ்கள், தோத்தி வகையறுக்கள் ஷை நெசவுசாலையில் தயாராகின்றன. மேற்கண்ட S. R. S. டிரேட் மார்க்குள்ள சரக்குகளையே கவனித்து வாங்குங்கள். நாணயத்திற்கும் உறுதிக்கும் உத்தரவாதமுள்ளதாயிருக்கும். டிரேட் மார்க்கில்லாத சரக்குகளை வியாபாரிகள், S. R. S. டவல் என்று சொன்னால் நம்பி மோசம்போகாதீர்கள். ஷை நெசவுசாலையிலேயே கதர் வேஷ்டிகளும் கதர் துண்டுகளும், கதர்சட்டை பீஸ் தினுசுகளும் தயாராகின்றன.

S. R. சுந்தரமய்யர், புரோப்ரைட்டர்.

# மதிப்புரை.

## நிலத்தீர்வை ஜந்திரி.

நிலத்தீர்வைக்கு ஒரு அணு ரேட்டு முதல் 25ரூ. ரேட்டு வரையில் ஒவ்வொரு அணு ரேட்டுக்கும் தீர்வை விகிதங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. ஒரேபக்கத்தில் ஒருரேட்டுக்குள்ள தீர்வை 1 செண்டுமுதல் 1000 செண்டுவரையில் பார்க்கும்படி ஏற்படுத்தியிருப்பது சவுகரியமே. 10 செண்டிற்கு இடையே இடம்விட்டிருப்பதுபோல் 5 செண்டிற்கு இடையேயும் இடம்விட்டிருந்தால் மிகவும்உபயோகமாயிருக்கும். அடுத்த பதிப்பில் இவ்விஷயம் கவனிக்கப்படுமென்று நம்புகிறோம். இந்த ஜந்திரி புஸ்தகமானது கிராமஉத்தியோகஸ்தர்களுக்கு இன்றியமையாதது. சர்வேயர்களுக்கும் நிலத்தீர்வை விஷயத்தில் சம்பந்தப்படுகிற மற்றவர்களுக்கும் அத்தியாவசியமானது.

துளிக்கணக்கு போட்ட ஜந்திரி வேறுகிடைப்பது அரிது. கிராமஉத்தியோகஸ்தர்கள் 500 துளிக்கு மேற்பட்டதை ஒருபைசாவாக சேர்த்துக் கொள்ளவேண்டும். விலை விபரம் விளம்பரத்தில் காண்க. ஆசிரியர் T. M. பஞ்சாபகேசய்யர்,

கும்பகோணம்.

## தேதி ஜந்திரி.

1927வரு முதல் 60 வருஷத்திற்கு தமிழ் வருஷம் மாதம் தேதி கிழமைக்கு சரியாக இங்கிலீஷ் வருஷம் மாதம் தேதி கிழமை காட்டப்பட்டிருக்கிறது. மிருந்த சிரமத்தின்பேரில் கணக்கு செய்து தயாரிக்கப்பட்டிருக்கிறது. வக்கீல்குமாஸ்தாக்களுக்கும் லேவாதேவிசெய்பவர்களுக்கும் வியாபாரிகளுக்கும் காலண்டர் தயாரிப்பவர்களுக்கும் அத்தியாவசியமானது. ஜோதிஷர்களுக்கு மிகஉபயோகமுள்ளது விலைவிபரம் விளம்பரத்தில்காண்க.

ஆசிரியர் T. M. பஞ்சாபகேசய்யர்,

கும்பகோணம்.

## தஞ்சாவூர் ஜில்லா சரித்திரம்.

ஸ்ரீமான் P. V. ஜெகதீசய்யரால்இயற்றப்பட்ட தஞ்சை ஜில்லா சரித்திரம் வரப்பெற்றோம் ஸ்ரீமான் L. D ஸ்வாமிக்கண்ணு பிள்ளையால் முகவுரை எழுதப்பட்டிருக்கிறது. ஜில்லாவின் முக்கியமான விஷயங்களெல்லாம் அடங்கியிருக்கிறது. பள்ளிக்கூடங்களில் பாடபுஸ்தகமாக ஏற்படுத்தப்படவேண்டியது அவசியம். ஜில்லாவின் படமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூட அதிகாரிகளின் கவனத்தைப் பெறுமாக வேண்டுவோர் ஸ்ரீமான் P. V. ஜெகதீசய்யர், ஆர்க்கியாலாஜிகல் சூப்பிரண்டெண்டு, திருவல்லிக்கேணி, சென்னை என்ற விலாசத்திற்கெழுதவும். விலை அணு 5.

## சுதந்தரன்.

இது இரங்கோனிலிருந்து வெளிவரும் ஓர் தேசீய வாரப்பத்திரிகை இதன் ஆசிரியர் ஜ. நா. சுந்தர முதலியார். தேசோபகாரியின் ஆசிரியராயிருந்து தேசத்தொண்டு புரிந்ததற்காக சிறைவாசம் செய்த தீரர். சுதந்தரனில் வகுப்புத்துவேஷம் என்பது தலைகாட்டாமல் காங்கிரஸ் கொள்கையைப் பின்பற்றி பல அரிய விஷயங்கள் சுதந்தரவேகத்துடன் பொலிந்து விளங்குகின்றன.

வருட சந்தா ரூபா 5—0—0

மானேஜர்:— "சுதந்தரன்"

37-38 [illegible] வீதி [illegible]கோன்.


சி. சாமி அண்டு சன் வயலட் காபியிங் பென்சிலை

உபயோகியுங்கள்.

ஒருமுறை வாங்கி உபயோகித்தால்

இதனுடைய உண்மை விளங்கும்.

ஸி. சாமி அண்டு சன்.,

ஜெனரல் மெர்ச்சென்ட் & அக்கவுண்ட் புக் மேக்கர்ஸ்,

நே. 242, சைனபஜார் ரோட், G. T. மதறாஸ்.





## எங்களிடம் கிடைக்கக்கூடிய புஸ்தகங்களின் கிரய ஜாப்தா.

| புஸ்தகங்களின் விவரம். | ரப்காகிதம். | கிளேஸ் காகிதம். | காங்கரர் காகிதம். |
|---|---|---|---|
| பட்டி விவரவிளக்கம் என்னும் பட்டிஜந்திரி முதல் பாகமும், இதில் 1927 அக்ஷயவருஷத்தோடு முடிவான 60 வருஷங்களுக்கு தேதிஜந்திரியும் அடங்கிய ஒரே பயிண்டு (பக்கம்-250) ... ... ... ... | 1 4 0 | 1 8 0 | 2 8 0 |
| பட்டி விவரவிளக்கம் என்னும் பட்டிஜந்திரி இரண்டாவது பாகம் இதில் தேதிஜந்திரி கிடையாது. (பக்கம்-400) ... | 2 0 0 | 3 0 0 | 4 0 0 |
| மேற்படி இரண்டு புஸ்தகங்களும் ஒரே பயிண்டில் (பக்கம்-650) | 3 0 0 | 4 0 0 | கிடையாது |
| நிலத்தீர்வை ஜந்திரி (பக்கம்-200) ... ... | 1 4 0 | 1 8 0 | 2 8 0 |
| சம்பளக்கணக்கு ஜந்திரி (பக்கம்-32) ... ... | 0 6 0 | 0 8 0 | 1 0 0 |
| 1927-ம் வரு பிரபவ முதல் 60 வருஷங்களுக்கு தேதி ஜந்திரி (பக்கம்-120) ... ... ... | 0 12 0 | 1 0 0 | 2 0 0 |
| மேற்கண்ட 120 வருஷங்களின் தேதிஜந்திரியும் ஒரே பயிண்டு செய்தது (பக்கம்-240) ... ... ... | 1 4 0 | 1 8 0 | 2 8 0 |

வி. பி. செலவு தனி.

தேதிஜந்திரி, சென்ற 60 வருஷங்களுக்கு [illegible] முதல் 60 வருஷங்களுக்கு வேருகவும் இருப்பதால் வேண்டியவர்கள் [illegible] இன்னவிலையென்பது தேவை என்றும், தங்கள் விலாசங்களைத் தெளிவாயும் [illegible] பெற்றுக்கொள்ளலாம்.

T. M. பஞ்சாபகேசய்யர், கும்பகோணம்.


## சந்தா நேயர்களே!

அடியிற்கண்ட கனவான்கள் "கிராமானுகூலன்" சந்தாத் தகையை வசூலித்துக் கொடுப்பதாக அன்புடன் இசைந்துள்ளார்கள் அவர்களிடம் சந்தா செலுத்தி புஸ்தகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தங்கள் சந்தா தொகையை [illegible] செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளலாமென்று தெரிவித்துக்கொள்கிறோம் [illegible] லாபமாகும்.

ஸ்ரீமான் G [illegible] அய்யர், கர்ணம், [illegible] காரியதரிசி, கி. உ. சங்கம், மன்னார்குடி.
ஸ்ரீமான் G [illegible] காரியதரிசி, கி. உ. சங்கம், கர்ணம், சித்தனையூர்.
ஸ்ரீமான் [illegible] கி. உ. சங்கம், கர்ணம், பழயனூர்.
ஸ்ரீமான் V. M. [illegible] கர்ணம், [illegible]
ஸ்ரீமான் T. R. [illegible] கர்ணம், [illegible]
ஸ்ரீமான் V. [illegible] காரியதரிசி, கி. உ. சங்கம், தஞ்சாவூர்.
ஸ்ரீமான் S. [illegible] ஐயர், [illegible] சித்தாமல்லி.
ஸ்ரீமான் [illegible] ஐயர், கர்ணம், [illegible]
ஸ்ரீமான் R. [illegible] கர்ணம், [illegible]
ஸ்ரீமான் S கிருஷ்ணமூர்த்தி ஐயர், கர்ணம், [illegible]
ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி ஐயர், கர்ணம், [illegible]
ஸ்ரீமான் T. S [illegible] முதலியார், காரியதரிசி கி. உ. சங்கம், கர்ணம், கெய்க்குப்பை.
ஸ்ரீமான் S. [illegible], கர்ணம், [illegible]பேட்டை.
ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி ஐயர், கர்ணம், [illegible]

மணத்தின் ஊற்று ! வாசனையின் வித்து !!

# பரிமளப் பொக்கிஷம்

எது ?

குடம்பகோணம் பெரியகடைவீதி

## K. அப்துல் ரஹிமான் ஸாகிப் & ஸன்ஸ்,

## பரிமளச்சாலை.

எமது பரிமளச்சாலையில் பரிமள வாசனாத்திரவியங்கள் எமது முன்னோர்களின் முறைப்படி அனுபவம் வாய்ந்த எங்களால் தயார்செய்து வழங்கப்பட்டுவருவது யாவரும் அறிந்ததே. எமது பரம்பரை வியாபாரப் பெருமையும், சாமான்களின் உயர்ந்த மணமும் அரசர்கள் ஜமீன்தாரர்கள், பிரபுக்கள், உயர்தர உத்தியோகஸ்தர்கள் மற்றைய நல்லோர்கள் பலராலும் கௌரவிக்கத்தக்கது என்பது ஒரு முறை வாங்கி அனுபவித்தவர்களுக்கு நன்கு விளங்கும். எம்மிடமுள்ள சகல பரிமளச்சாமான்களும் முனிசிரேஷ்டரான ஷேக்பரீத் சக்கரகஞ்ச் அவுலியா அவர்களால் தயாரிக்கப்பட்டு அனுபவசித்திபெற்றன. மது முன்னோர்கள் டில்லி அக்பர் சக்கிரவர்த்தியாருக்கும், தஞ்சை மன்னர்பிரானுக்கும் பரிமளப் பொருளை வழங்கினார்களென்பதையும், அம்முறைப்படியே நாம் இப்பொழுதும் தயாரித்து வருகிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். [கேட்லாக் இனாம்.]

மணம் மிகுந்தவை ! குணம் நிறைந்தவை !!

# ஜெயலெக்ஷ்மி அண்டு கோ.,

## அத்தர் வியாபாரம்,

## பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

### முக்கிய கவனிப்பு.

இதனால் தெரிவித்துக்கொள்வது யாதெனில் :—எங்களால் தயாரிக்கப்படும் ஸாமான்கள் மற்றவர்களைப்போல் வீணான படாடோபமன்னியில் ராஜாங்க பண்டிதர்களால் கையாளப்பட்டுவந்த முறைகளில் சொல்லியபடிக்குள்ள மூலிகை சரக்குகள் பூராவையும் சேர்த்து செய்பாகம் தவராது உயர்ந்தமாதிரியாக மணம், குணம், நலம் இம்மூன்றும் ஒற்றிருக்கும்படித் தயாரித்து நேயர்களுக்கு நன்மையைச்செய்து அதனால் நாங்கள் தக்க ஸர்டிபிகேட்டுகளும் பெற்றிருக்கிறோம ஸ்ரீமான்கள் அன்புடன் நமது வாஸனைசாலைக்கு விஜயம் செய்து நேரில் பார்த்துக்கொண்டு தங்கள் சிநேகிதர்களுக்கும் நமது வாஸனைசாலையைப்பற்றி சிபார்சுசெய்து நல்லாதரவு அளிக்கும்படி வேண்டுகிறோம்.


Printed at the Sri Kamakshi Amman Press and Published by N. Apathsagaya Aiyer at Kumbakonam.